# சிங்கள அரசின் 'ஏஜண்டுகள்'

# தமிழ் ஈழத்தின் தலைவர்களா?


# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 — விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, ஐப்பசி 5 உ (21-10-73) ஞாயிறு நமழா:ஆசிர் 23 — புத்தகம் 27 இதழ் 8


## உணவுற்பத்தித்துறையில் அரசின் உலுத்தத்தனமான போக்கு!

### இன்று யாழ்நகரில் கூடும் தமிழர் கூட்டணி இது குறித்து ஆலோசிக்கிறது!

உணவுற்பத்தியென்ற போர்வையில் தமிழ் ஈழத்தில் நிறுவப்பட்டுள்ள மாவட்ட அபிவிருத்தி சபைகளின் அரசியல் தலைவர்களாக தனது கையாட்களை அரசாங்கம் நியமித்திருப்பதன் மூலம், தமிழ் ஈழத்தை ஒரு 'காலனி' பிரதேசம் போல நடத்த திட்டமிடப்படுகிறதா?

வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் தான் கைப்பற்றிய குடியேற்ற நாடுகளில் தனது கையாட்களை நியமித்து ஆட்சியை நடத்தியது போல் — தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகளான தமிழர் கூட்டணியினரை ஒதுக்கி புறக்கணித்துவிட்டு — சிங்கள — அரசும் தனது பிரதிநிதிகளையும், தனது பாதம் தாங்கிகளையும் அரசியல் தலைவர்களாக நியமித்து உணவுற்பத்தி என்ற போர்வையில் தமிழ் மக்களை ஆட்சிபுரிய நினைக்கிறதா?

—இவ்வாறான கேள்விகள் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் ஆராயப் படவிருக்கின்றன.

உணவுற்பத்தித் திட்டத்தின் கீழ், யாழ் மாவட்ட

(5-ம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழரின் அடிப்படை உரிமைக்கு ஐ. நா. வில் நாவசைக்கும் நாள் எந்நாள்?

அண்மையில் திருமதி இந்திரா காந்தி சென்னைக்கு வந்திருந்தபோது சென்னையிலுள்ள இலங்கைத் தமிழர் விடுதலை இயக்க ஆதரவாளர்கள் பின்வரும் பிரசுரத்தை வெளியிட்டிருந்தார்கள்:—

''வருக! வருக! இந்திரா காந்தியே வருக! வருக!
விடுதலை, விடுதலை ஆப்பிரிக்க மக்களுக்கு என்கிறீர்களே!
விடுதலை — இலங்கைத் தமிழருக்கு என்றுரைப்பது எப்போது!
இடி அமினால் உகண்டாவில் இனவெறி!
இலங்கையில் சிறிமாவோவால் சிங்கள வெறி!!
திபெத் வழியாக அன்று நுழைந்த சீனு!
இன்று கச்சத்தீவு வழியாக வரப்பார்க்கிறது!
சிறிமாவோ — சாத்திரி ஒப்பந்தப்படி பெற்றது குடியுரிமை!
தமிழர் இழந்ததோ — மொழி, மத, ஆட்சி வேலை வாய்ப்பு, சம உரிமை!
ஈழத்தமிழரின் அடிப்படை உரிமைக்கு!
ஐ. நா. வில் நாவசைக்கும் நாள் எந் நாள்?''

# எந்த விலைகொடுத்தேனும் சுயாட்சியை அடைந்தே தீருவோம்!

## பி. டி. ஐ. நிருபருக்கு அமிர் பேட்டி!

—'இந் நாட்டுத் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கையை சிங்கள மக்கள் ஒப்புக்கொண்டு, தமிழ் மக்களின் சுயாட்சியை அங்கீகரித்தால், நாட்டின் ஒற்றுமைக்கு ஊறுநேராத வகையில் எமது இலட்சியம் கை கூடும்.

'அப்படியன்றி — தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை சிங்களவர்கள் ஒப்புக்கொள்ள மறுத்தால் — நாட்டின் ஒற்றுமையை பலியாக்க நேர்ந்தாலும் — வேறு எந்த விலையை கொடுத்திட நேர்ந்தாலும் — எவ்வளவு தியாகம் செய்ய நேர்ந்தாலும் — தமிழ் மக்கள் போராடி தங்கள் தன்னாட்சியை நிலைநாட்டியே தீருவார்கள்'—

—இவ்வாறு பி. டி. ஐ. நிருபருக்கு அளித்தபேட்டியொன்றில் தமிழர் கூட்டணிசெயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் உறுதியுடன் தெரிவித்துள்ளார்.

## தந்தையின் தொகுதியில் தமிழர் பாசறை

மேற்படி தொடர் கட்டுரை அடுத்தவாரம் வெளிவரும்.

— ஆர்.

## ஈழத்தமிழர் பிரச்சினையில் தி. மு. க.

''இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை எதிர்த்து தி. மு. கழகம் 1961-ம் ஆண்டு மே மாதம் 9-ம் நாள் மாபெரும் பேரணியொன்றை சென்னை நகரில் நடத்திக்காட்டியது. அந்த ஊர்வலத்திற்கு பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் தலைமை வகித்தார்கள்; அண்ணாவும் கழகத் தலைவர்களும் கலந்துகொண்ட அந்தப் பேரணி கழகத்தின் வலுவை மட்டுமல்ல — தமிழர்களைக் கொடுமைப்படுத்தும் இலங்கை அரசுக்கு எதிராக தமிழகம் விடுக்கும் கண்டனத்தையும் உலகிற்கு தெளிவாக அறிவித்தது. இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தி. மு. க. நிறைவேற்றிய தீர்மானம் சென்னையிலுள்ள இலங்கை அரசின் துணைத்தூதுவரிடம் வழங்கப்பட்டது.''

— தமிழக முதல்வர் டாக்டர் மு. க. ஆதாரம்: தினமணி கதிர் (7.9.73) 'நெஞ்சுக்கு நீதி' கட்டுரை)

## உண்ணாவிரதம் இன்று 41வது நாள்!

தமிழ் இளைஞர் பேரவையினர் தொடர்ச்சியாக ஐம்பது நாட்களுக்கு நடத்தி வருகின்ற உண்ணாவிரத இயக்கம், இன்று(21-10-73) 41வது நாளாக வவுனியாத் தொகுதியில் நடைபெறுகிறது. உண்ணாவிரதத்தை வவுனியா பா. உ. திரு. செல்லத்தம்பு தொடக்கி வைப்பார்.

39ம், 40ம் நாள் உண்ணாவிரதங்கள் திருக்கோணமலைத்தொகுதியில் முறையே நிலாவெளியிலும் திருக்கோணமலையிலும் 19ம், 20ம் திகதிகளில் நடைபெற்றது.

வவுனியாத் தொகுதியைத் தொடர்ந்து, மன்னார் கிளிநொச்சி, சாவகச்சேரி ஆகிய தொகுதிகளில் நடைபெறவிருக்கும் இந்த உண்ணாவிரத இயக்கம், 31-19-73 யாழ் கோட்டை மைதானத்தில் 50வது நாள் நடைபெறும் பிரமாண்டமான உண்ணாவிரதத்துடன் நிறைவு பெறும்.

# உண்ணாவிரதத்துக்கு ஆதரவு கோரிய தமிழ் இளைஞர்களை பொலீஸில் பிடித்துக் கொடுத்தாராம்!

## மட்டுநகரில் எட்டப்பர் திருக்கூத்து!

தமிழ் இளைஞர் பேரவையின் மட்டக்களப்புமாவட்ட அமைப்புக்குழு, தனது உண்ணாவிரத இயக்கம் சம்பந்தமாக மட்டக்களப்பிலுள்ள அரசியல் தலைவர்களிடம் கட்சி வேறுபாடின்றி கலந்தாலோசிக்க முடிவெடுத்து அப்படியே செய்தது.

இளைஞர் பேரவைக்குழுவினர், மட்டக்களப்பின் இரண்டாவது பா. உ. திரு. பி. ஆர். செல்வநாயகத்திடமும் ஆதரவுகோரி அவருடைய இல்லத்துக்கு சென்றார்கள். அப்போது அவர், உண்ணாவிரதத்துக்கு தமது ஆதரவு கிடையாது என்று கூறினாராம். அத்துடன் விட்டிருந்தால் கூடப் பரவாயில்லை!

ஆதரவு கோரிச் சென்ற தமிழ் இளைஞர்கள் இருக்கையில் இருக்கும்படி கூறிவிட்டு, உடனடியாக மட்டக்களப்பு உயபொலீஸ் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டு, பொலீசாரை வரவழைத்து அந்த இளைஞர்களை அவர்களுக்கு காட்டிக் கொடுத்தாராம்!

சத்தியப்பாதையில் நடக்கின்ற இளைஞர்கள் பொலிசாருக்கு எதற்கு அஞ்சப் போகின்றார்கள்? பொலிசாரிடம் தங்கள் பெயர் முகவரிகளை கொடுத்துவிட்டு அங்கிருந்து சென்றார்கள். அவர்கள் இப்போது இந்த இளைஞர்களை சி. ஐ. டி. யினர் சுற்றித் திரிகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# 'நியூ வேவ்'

நான் கடற்கரைக்கு வந்து இரு மணிநேரமாகிறது; நான் வரும்போது வெறிச்சோடிக் கிடந்த கடற்கரை இப்போது ஜனத்திரள் நிரம்பியதால் களைபெற்று விளங்குகிறது. எனது வலதுகைப்புறத்தில் திருக்கோணமலைக் கோட்டை வாயிலைத் தழுவிச்செல்லும் அலைகள் வானளாவ எழுந்துவிட்டு எழுந்த வேகத்தோடு மடிந்து அந்தப்பெரிய நீர்ப்பரப்பிற் சங்கமமாகின்றன. அதை நிரப்பப் புதிய அலைகள் எழுகின்றன. இது பார்ப்பதற்கு விந்தையாக இருக்கிறது. என் எதிர்ப்புறத்தே 'ஷோபோட்' களியாட்ட விழா அரங்கு மின்னொளி நிரம்பிக் கந்தர்வலோகம் போற் காட்சி தருகிறது. வசதியுள்ளவர்கள் பெல்பொட்டம்ஸ், மினிகள், இன்னும் இப்படியான புதிய நவநாகரீக உடைகளுடன் உள்ளே செல்கிறார்கள். இன்னும் சிலர் உள்ளே இருந்து வெளியே வருகிறார்கள். வசதியற்றவர்கள் வெளியே நின்று போவோர் வருவோரைப் பார்த்துத் திருப்தியடைகிறார்கள்.

என் பிற்பக்கந் திரும்புகிறேன்: கடற்திரையைக் கிழித்துக்கொண்டு கிழக்கு வானில் பூரணச் சந்திரன் பொலிவுடன் எழுந்து கொண்டிருக்கிறான். அந்த அழகு பார்வை மங்கிக் கொண்டு போகும் நிலையில் இருந்த என் விழிகளைக் கூடக்கிறங்க வைக்கிறது: இவற்றில் மனதைப் பறிகொடுத்து இந்த உலகத்தையே மறந்து போயிருந்த என்னை 'அண்ணா' என்ற குரல் இவ்வுலகுக்கு மீட்கிறது.

என் பின்னால் எழுத்தாளர் ஜீவன் நின்று கொண்டிருக்கிறான். அவனைப் பிரமிப்புடன் பார்க்கிறேன். 'ஜீவனா வா...வா ...தனிமை உனக்கு மட்டுந்தான் சொந்தமா ...? நீ தேவைக்காகத் தனிமையை நாடுபவன். நான் வேறு வழியின்றித் தனிமையை நாடுபவன். இதுதான் எம் இருவருக்கும் உள்ள வித்தியாசம். எனக்கு வயதுபோய்விட்டது. கைப்பிடித்தவள் நிம்மதியாகக் கண்ணை மூடிச்சென்று விட்டாள் அவள் என்னை முந்திவிட்டாள். பிள்ளைகளும் அவர்கள் குடும்பம் குழந்தைகள் என்று பிரிந்து போய் விட்டார்கள்; நான் இப்போது மீண்டும் தனிமரமாகி நிற்கிறேன். மாலைப் பொழுதில் எனக்கு இந்தக் கடற்கரைதான் துணை' என்கிறேன் அவனிடம்.

அவன் என்னைக்கூர்ந்து பார்க்கிறான். ஏதோ நினைத்துக்கொண்டவன்போல் வேட்டித் தலைப்பைத் தூக்கிவிட்டு அந்த மணற் பரப்பில் கடலை நெருங்கினாற் போல் என் பக்கத்தே அமர்ந்து கொள்கிறான். என்னண்ணா... வேதாந்தம் பேசுறீர்கள். உங்களுக்கு இப்போ அப்படி என்னகுறை வந்து விட்டது: வீடு நிறைந்த பிள்ளைகள், பணம், கார், பங்களா...'

இவையெல்லாம் வாழ்க்கையாகி விடமுடியுமா? 'நான் அவனை இடைமறித்துக் கூறுகிறேன்.

அவன் என்னை ஆச்சரியத்துடன் பார்க்கிறான். நான் அவன் சிந்தனையை ஈர்ப்பதற்காகச் சென்றவாரம் பிரசுரமாகிய 'எரிமலை' என்கிற உன்கதை படித்தேன். உலகம் நிமிடத்துக்கு நிமிடம் முன்னேறிக்கொண்டிருக்கும் இந்த வேளையில் எல்லாவற்றிலும் ஒரு புதிய அலையை அதாவது 'நியூ வேவைத்' தேடிக்கொண்டிருக்கும் சமுதாயத்திற்கு நீ இன்னும் பழைய பண்பாட்டையும் பழைய கருத்தையும் வைத்தே கதை எழுதிக்கொண்டிருக்கிறாயே...? ஏன்...? என்று அவன் சமீபத்தில் எழுதிய கதையைப் பற்றி ஒரு பெரிய வினாவை எழுப்பினேன்.

அவன் என்னை ஒரு மாதிரியாகப் பார்க்கிறான். ஓஹோ! என்னண்ணா நீங்களும் இந்தப் புதிய அலைச்சுழியிற் சிக்கித் தவிக்கிறீர்களா ...? அந்த வயதெல்லையைத் தாண்டிவிட்ட நீங்களே...

அவன் தன் வினாவை முடிக்காமல் என்னைச் சஞ்சலத்தோடு நோக்க 'டேய் டேய் நான் சும்மா கதைக்குச்சொன்னனான். உன்கதைகளை முதலில் விழுந்து விழுந்து படிப்பவன் நான்தானே. இந்த உகலம் இப்படிக் கண்மூடித்தனயாக நாகரீகத்துள் மூழ்கியிருக்கும் இவ்வேளையில் நீ மட்டும் எப்படி இவற்றைத் தொடாமல் எழுதுகிறாய் என்ற வியப்புத்தான் என்னை இப்படிக் கேட்க வைத்தது. நீ அதற்குள் கோபித்துக்கொள்கிறாய் என்கிறேன்.

அவன் சிரிக்கிறான். அவனது முகத்தில் ஒரு புது மலர்ச்சி: அதே வேளை எங்களைத் தாண்டிக் கடற்கரையோரமாக ஒரு கூட்டம் செல்கிறது. அவர்கள் ஆண்களா பெண்களா என்று பகுத்தறிவது வயதுபோன என் கண்களுக்குக்கஷ்டமாக இருக்கிறது. நான் கேள்விக்குறியுடன் ஜீவனைப் பார்க்கிறேன்.

அவன் என்னைப் புரிந்துகொண்டவன்போல் அவர்களில் இருவர்தான் பெண்கள் மற்றவர்கள் யாவரும் ஆண்கள் என்கிறான். அவனது மதிப்பீட்டை நான் ஒரு புன்னகையுடன் வியக்கிறேன். பெண்கள் இருவரும் பாற்பண்ணை முத்தையாவின் பிள்ளைகள் என மேலும் விளக்கந் தருகிறான் அவன்.

இதுகளைப் பார்க்க எனக்கு என் பழைய காலம் என் இளமைக்காலம் நினைவுக்கு வருகிறது. அப்போது எனக்குப் பத்து வயதிருக்கும் ஜீவன். எங்கள் வீட்டுக்கு வெள்ளிக்கிழமைதோறும் உணவருந்த ஒரு அநாதைப் பெண் வருவது வழக்கம். அவளை நாங்கள் சுருக்குக் கை ஆச்சி என்றுதான் அழைப்பது வழக்கம். முழங்கை முட்ட நீட்டுக் கை தைத்து அதில் இருந்து ஒரு யாண் தூரம் வரை சுருக்கு வைத்துத் தைக்கப்பட்டிருக்கும். அந்தக் காலத்தில் அது அநாகரீகம். இப்போ என்னடா என்றால் 'பெல்பொட்டம்ஸ்' என்று நாகரீகமாகக் கூறிக் கொள்கிறார்கள். என்று கூறிவிட்டுச் சிரிக்கிறேன்.

அது என்ன பிரமாதம் அண்ணா. ஏதோ 'ஹிப்ஸ்டர்' என்றெல்லாங் கூறி உடையணிகிறார்களே. அந் நாட்களில் எங்கள் அம்மா இடுப்புத்தெரியப்பாவாடையும் சட்டையும் அணிந்துதான் சேலை உடுப்பார்கள்; அது அநாகரீகம் என்று எனது சகோதரிகள் ஒருவரும் அம்மாவுடன் வெளியே செல்ல மாட்டார்கள் அது அப்போது அவர்களுக்கு வெட்கமாம். ஆனால் இப்போது இடுப்பு மட்டுமா... எப்படியெல்லாமோ உடையணிந்துகொள்கிறார்கள். அது நியூவேவ்! கூறிவிட்டு வாய்விட்டுச் சிரிக்கும் அவன் ரஸனையை நான் மெச்சுகிறேன். அப்போது எங்களுக்கு சற்றுத்தூரத்தே தள்ளி யாரோ ஒரு இளைஞன் 'முருகா' என்று வாயார அழைத்தபடியே அமர்ந்து கொள்கிறான். அவன் கையில் ஒரு புத்தகம்.

'யாரப்பா அது... இந்த நாட்களிற்கூட முருகனை இந்த இடத்தில் அழைக்கும் இவன் என்று கேட்டுப் பதிலுக்காக ஜீவனைப் பார்க்கிறேன்: இவனைத் தெரியவில்லையா அண்ணா? கோபால் நீதவானின் ஒரே மகன் சங்கர். அந்நாட்களில் ஹிப்பிஸ்டையிலில் உடையணிந்து தலைமுடி வளர்த்துப் புத்தம் புதிய காரில் எங்கள் தெருவையெல்லாம் பன்முறை வலம் வருவானே... பிறகு பெற்றோர் இறக்க இங்கிலாந்து சென்று...அங்கே...

'யாரோ வெள்ளைக்காரப் பெண்ணை மணஞ் செய்துகொண்டதாகக் கதைத்தார்களே அவனா இவன் என்று ஜீவன் விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்து முடிக்கிறேன் நான்.

சாட்சாத் அவனேதான் அண்ணா! அவனுடைய கதையே சோகம் நிறைந்


திருமதி
ந. பாலேஸ்வரி


தது. செல்வந்தர்களான பெற்றோருக்கு ஒரே மகனாகப் பிறந்து இளமையிலேயே எல்லாவித இன்பங்களையும் நுகர்ந்து இளைத்தவன்: நிறைந்த செல்வம். ஒரே புத்திரன், இதனால் நினைத்தபடியெல்லாம் நடக்க அவனால்முடிந்தது. எஸ்.எஸ்.ஸி. கூடச் சித்தியடையத் தவறிவிட்டான். தலைமுடியைத் தோள்வரை நீட்டாக வளர்த்து நாளாந்தம் ஒவ்வொருவித உடையணிந்து நாகரீகத்தின் உச்சிப்படிக்கே தான் ஏறிவிட்டதாக எண்ணினான். தகப்பனார் 'திடீர்' என ஒரு நாள் மாரடைப்பால் இறந்தார். அந்தப் பிரிவைத் தாங்காது அவனது தாயும் அவரைத் தொடர்ந்து சென்றாள். அவனே சொத்துமுழுவதற்கும் ஏகபோக உரிமையாளனானான். பணம் நிறைய இருந்ததால் மலரை நாடிச் செல்லும் வண்டுகள்போல் நண்பர்களும் அவனைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டனர். அவனது பணம் கரையும் வரை அவனைச் சுற்றி ஒரு கூட்டம்.

புதிய அலையை நாகரீகத்தில் மட்டும் கடைப்பிடித்த கூட்டத்தில் அவனும் ஒருவனாகத் திரிந்தான். பணஞ் சிறிது சிறிதாகக் கரைந்தது. அதனால் அவன் அதை உணர்ந்து தன் பிடியைச் சிறிது இறுக்கினான் அவனைச் சுற்றியிருந்த கூட்டம் தானாகவே விலகத்தொடங்கியது. அவன் அதை இலேசாக உணர்ந்தான். செத்த நாயைவிட்டு உண்ணி அகல்வது போல் அகன்ற நண்பர்களைப் பார்த்துத் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான். அவனுக்கு வாழ்க்கையின் மீதே ஒரு வெறுப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். ஒரு நாள் என்னைக்கண்டு தான் சொத்துக்களை எல்லாம் விற்றுவிட்டு மேலைத்தேசம்போகப்போவதாகக் கூறியபோது நான் திகைப்படைந்தேன்: அவனைப் பார்த்து ''ஏனப்பா இந்த முடிவெடுத்தாய் என்றேன் பரிதாபத்தோடு.

''ஐ வோண்டு கெற் லொஸ்ட்'' என்றான் ஆங்கிலத்தில்; நான் எங்காவது தொலைந்துவிடப்போகிறேன் என்றான். அவனது பதிலில் விரக்தி தொனித்தது. அவனைத் தடுக்கும் துணிவு எனக்கு அப்போது இருக்கவில்லை.

அன்று போனவன்: அவனை நானும் மறந்து விட்டேன்: அவனும் அவன் நினைத்தபடி எம் எண்ணத்திலும் சிந்தனையிலும் இருந்து தொலைந்தே விட்டான். இடையில் கால மலரில் பல வருட இதழ்கள் உதிர்ந்து கருகிவிட்டன: இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு நாள் தெருவினில் அவனைக் கண்டேன். ஆனால் அவனேதான் என்பதை நிட்சயிக்க எனக்குப் பலநிமிடங்கள் எடுத்தன. உருவம் அவனாகவே இருக்க உடை நடையில் மாத்திரம் பெரிய மாற்றந் தெரிந்தது: அவனிடம் ஒரு தெளிவு, அவன் முகத்தில் ஒரு அமைதி முதிர்ச்சி காணப்பட்டது. அவன் என்னைப் பார்த்துப் புன்னகைத்தான். எனக்குப் பெரிய தர்மசங்கடமாய் விட்டது.'' நீ யார் என்று அவனிடம் எப்படிக் கேட்பது? ஆகவே மௌனமாக நானும் பதிலுக்குச் சிரித்தேன்.

என்ன அண்ணா அப்படிப் பார்க்கிறீர்கள். தொலைந்தவன் எப்படித் திரும்பிவிட்டான் என்று பார்க்கிறீர்களாக்கும் அவன் குரல் அவன் சங்கர்தான் என்பதை எனக்கு ஊர்ஜிதப்படுத்தியது.

'ஈஸ்ட் ஓர் வெஸ்ட் தி ஹோம் இஸ் பெஸ்ட்' கிழக்காயிருந்தாலும் வடக்காயிருந்தாலும் வீட்டைப் போல் வராது... தொலைந்து போய்விட வேண்டும் என்று சென்ற நீ உன் பிறந்த நாட்டை நாடியே வந்து விட்டாய் பார்த்தாயா...... என்றேன்.

அவன் சிரித்தான்! பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந்தன என்பதை இப்போது உணர்கின்றேன். என்னை ஒரு 'நியூ வேவ்' அடித்துக் கொண்டுபோய் விட எத்தனித்தது. எதிர் நீச்சல் போட்டுத் தப்பித்து வந்துவிட்டேன். அண்ணா... லண்டனில் என் வாழ்க்கையின் முதற்பாகம் முற்றுப் பெற்று விட்டது. இப்போது உண்மையான உறுதிப் பொருளை தேடி அலைகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றான் என்று முடித்தான் ஜீவன்.

நான் பிரமிப்புடன் அவனைப் பார்க்கிறேன். அப்போது திடீர் என நாங்கள் இருந்த பக்கம் நோக்கி விசையாகவந்த பெரிய அலையொன்று தண்ணீர் திவலைகளை எம்மீது தெளித்து எம்மை நனைத்துவிடுகின்றது. 'அது ஒரு புதிய அலை... புதுவேகம்' என்று சிரித்துக் கொண்டே எழும்புகிறான் ஜீவன். உனக்கும் புதிய அலையில் கதை எழுத ஒரு புதிய கரு கிடைத்திருக்கும் என்று கூறியபடி நானும் எழுந்து அவனைப் பின் தொடர்கிறேன்.

## ஆசிரியர்களுக்கு ஒரே அணி!

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கம் என்பவற்றின் இணைப்புச் சபைக் கூட்டம், 23-9-73ல் தமிழாசிரிய சங்க யாழ்ப்பாணப் பணிமனையில் நடைபெற்றது. டி. எஸ். கே. வனசிங்கா, தலைமை வகித்தார் 'சமுதாயத்தின் நலனையும் நாட்டின் நலனையும், உத்தேசித்துத் தமிழர் ஆசிரியர் அனைவரையும் ஒரே அணியில் திரட்டி, ஆசிரியர்சங்கங்களின் இணைப்பை ஆசிரியர்களும் ஆசிரிய சங்கங்களுமன்றி நாடு முழுவதுமே எதிர்பார்க்கிறது; வரவேற்கிறது' எனத் தலைவர் தனது முன்னுரையில் கூறினார்.

இணைப்புச் சபைச் செயலாளர் திரு. ச. கதிரவேலு பேசுகையில், 'பெயர்' அமைப்பு விதிகள், அலுவலகம், பதிவிலக்கம் என்ற பல துறைகளில் பேச்சுவார்த்தை மூலம் ஒருமைப்பாடு கண்டோம், இன்று, ஆரம்ப வருட நிர்வாக சபை எவ்வாறு அமைய வேண்டும் என்பதில் நல்ல முடிவுக்கு வந்துள்ளோம். இந்த இணைப்பு முடிவை, பல வருடங்களுக்கு முன்பே, தமிழர் ஆசிரியர்கள் ஒன்றாய் இணைய வேண்டும் என அறிவுரை கூறிய ஆசிரிய தொழிற் சங்க வாதிகளின் [illegible] [illegible] தமிழர் ஆசியர் அனைவரும் ஒன்று திரளும்போது, தமிழாசிரியர்களின் பிரச்சினைகள் மட்டுமன்றி, சமுதாயத்தின் பிரச்சினையும், நாட்டின் பிரச்சினையும், கூட இலகுவாகத்தீர்ந்துவிடும் என்றார்.

இணைந்த பொதுக்கூட்டம் நவம்பர் மாதத்தில் நடைபெறும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## நாய்த் தமிழா HOW?

இரண்டு அசல் தமிழர்கள் எதிர் எதிர் புறமிருந்து வந்து சந்திக்கின்றனர். ஒருவரையொருவர் கண்டதும் ஒருவன் 'கலோ கவ்' என்கின்றான், பதிலுக்கு மற்றவனும் 'கவ்' என்கின்றான். ஒருவரையொருவர் இருவரும் குரைத்துக் கொண்டனர்.

பக்கத்தே நின்ற பறைநாய் வாலைச் சுருட்டித் தன் இரண்டு பின்கால்களுக்குமிடையே சொருகி வைத்துக் கொண்டு ஓடி மறைந்தது அதற்கு அவமானமிருக்காதா என்ன?

நாயை விட அழகாகக் குரைக்கும் இத்தமிழன் யார்? — அவன்தான் நாய்த் தமிழன்.

—நீரன்—

## நிதி குவிகிறது!

'சனவரியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கும் மாநாட்டிற்கு நிதி அளித்த பொதுமக்கள் பணத்தைத் திருப்பிக் கேட்கிறார்கள் என்ற கூற்றில் துளி அளவேனும் உண்மையில்லை: கிளையின் தலைவராய் இருந்தும், செயற்குழு உறுப்பினராய் இருந்தும் இராஜினாமாச் செய்த டாக்டர் தம்பையா, டாக்டர் ஆனந்தராஜன் இருவர் மட்டுமே மாநாட்டிற்கென அன்பளிப்பாகக்கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டுள்ளார்கள்; அவர்கள் இன்னமும் கிளையின் உறுப்பினர்களாகவே இருக்கிறார்கள். மாநாட்டிற்காக ஆயிரக்கணக்கில் அன்பளிப்பாக அளிப்பதாகக் கூறிய பெருமக்கள் எவருமே திருப்பிக் கேட்கவில்லை' என்று தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையில் சிறப்புக் கூட்டமொன்றில் பொருளாளர் திரு. செல்வநாதன் விளக்கமளித்தார்.

இதே கூட்டத்தில் பேசிய பல உறுப்பினர்கள், 'இராஜினாமாச் செய்யும் பொழுதே மாநாட்டிற்கு உதவி தேவைப்பட்டால் அதை மகிழ்ச்சியுடன் செய்வேன்' என்று அன்றுடம் புளுகும்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழம் - ஒரு 'காலனி' நாடா

அன்பு நண்பா,

காலம் பல விசித்திரங்களை செய்துகாட்டக்கூடிய ஓர் அற்புதமான சக்தி மட்டுமல்ல—ஒரு நேரத்தில் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளான சில கொள்கைகளும் கோட்பாடுகளும் பின்னர் ஒரு நேரத்தில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சூழ்நிலையை சிருஷ்டித்துக் காட்டக்கூடிய வல்லமையும் காலதேவனுக்குண்டு என்பதை வரலாற்றில் நாம் கண்டுவருகிறோம்.

புத்தனும், யேசுவும், நபிகள் நாயகமும் ஒரு காலத்தில் பரப்பிய தத்துவங்கள், அவர்களது காலத்தில் மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்டதாக நாம் கேள்விப்படவில்லை; அவர்கள் பட்டது கல்லடியும், சொல்லடியும், சித்திரவதையும், கொலைத்தண்டனைகளும் தாம்! இன்றைக்கு இந்தப் பெருமக்களது கொள்கைகளும் தத்துவங்களும் உலக மக்களால் உணரப்பட்டு — போற்றப்பட்டு, பின்பற்றப்பட்டுவருவதை காணுகின்றோம்.

காந்தியார், சர்வவல்லமை படைத்திருந்த வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்துக்கு எதிராக போராடுவதற்கு அஹிம்சையெனும் ஆயுதத்தை—சாத்வீக நெறியை — தேர்ந்தெடுத்தபோது அவரை நோக்கி கேலியும், கிண்டலும் இழிமொழியும், ஏளனச் சொற்களும் வந்து குவிந்தன. ஆனால் காந்தியார், தம்முடைய அஹிம்சை ஆயுதத்தால் வெள்ளையனை விரட்டியடித்த பின்னர்தான், அஹிம்சையின் ஆற்றலை இந்த உலகம் உணர்ந்தது: போற்றத் தொடங்கியது.''

நண்பா, இந்த நாட்டின் வரலாற்றை எடுத்துப் பார்த்திடின், அரசியலில், காந்தியார் காட்டிய அஹிம்சை வழியை—சாத்வீக

## அரசியல் மடல்

நெறியை உணர்ந்து—முதன் முதலில் அதைப் பின்பற்றத் தொடங்கியவர்கள் தமிழினத்தவர்கள்தாம்!

சர்வ வல்லமைபடைத்த சிங்கள ஏகாதிபத்தியத்திடமிருந்து தமிழினத்தை மீட்டிடவும் விடுதலையை பெற்றிடவும் தமிழ் ஈழத்தை அமைத்திடவும் அஹிம்சையையே ஆயுதமாக தமிழரசுக்கட்சியினரும் தமிழ் மக்களும் ஏற்றுக்கொண்டபோது—அதைப் பார்த்து ஏளனச் சிரிப்பு சிரித்தோர் ஏராளம். அவர்களிடம் படைபலம் உண்டு; எண்ணிக்கை பலம் மெத்தவுண்டு: அதிகார பலம், ஆட்சி பலம் உண்டு—அஹிம்சையால் என்ன செய்திட முடியும் என்று தமிழ் மக்களில் சிலர்கூட நையாண்டி வார்த்தைகளை நமைப் பார்த்து உதிர்த்ததுண்டு; ஆனாலும்கூட, அவற்றையெல்லாம்-அலட்சியம் செய்துவிட்டு — சாத்வீக நெறியிலே—அறவழியிலே தமிழினத்தை வழி நடத்தி—விடுதலைப் போரை கடந்த இருபது ஆண்டுகளாக நடத்திவருகிறது தமிழரசுக் கட்சி!

இன்றைக்கு தமிழரசுக்கட்சி காட்டிவந்த அஹிம்சைப் பாதையை — தமிழினம் முழுவதுமே ஏற்றுக்கொண்டு தமிழர் கூட்டணியின் தலைமையில் சாத்வீகப் போரில் குதித்து—தனது சுதந்திரத்துக்காகப் போராடி வருகின்ற நிலை தோன்றியிருப்பதைத் காண்கின்றோம்!

நண்பா, அஹிம்சைப் பாதையை — சாத்வீகப் போர் முறையை — தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டிருப்பது மட்டுமல்ல— இன்றைக்கு சிங்கள மக்களும் அந்த வழியில் வந்துகொண்டிருக்கின்ற அதிசயத்தை காலம் நமக்கு உணர்த்தி வருகின்றது!

ஆம் நண்பா, 1956ம் ஆண்டு ஜூன் ஐந்து —நினைவிருக்கிறதா உனக்கு—எப்படி மறந்திடுவாய் அதனை — அந்நாள், சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து காலி முகத்திடலில் தந்தைசெல்வாவின் தலைமையில் நம்முடைய தமிழர் பெரும் படை சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்தபோது — அச்சத்தியாக்கிரகிகளுக்கு எதிராக சிங்களவர்கள் எத்துணை தூரம் காடைத்தனத்தில் ஈடுபட்டிருந்தார்கள்; எத்துணை தூரம் துன்புறுத்தி கொடுமைப்படுத்தி அடித்து உதைத்தார்கள்; அவமரியாதை செய்தார்கள்; என்பதெல்லாம் மறந்துவிடக்கூடிய நிகழ்ச்சிகளா என்ன;

அன்று நம்முடைய சத்தியாக்கிரகத்தை இகழ்ந்தவர்கள் — சத்தியாக்கிரகிகளை அடித்துத் துன்புறுத்திய அதே சிங்கள மக்கள் தாம்—இன்றைக்கு தமிழ் மக்கள் பின் பற்றி வருகின்ற அஹிம்சை வழியை தாமும் பின்பற்றி — அதே, காலிமுகத்திடலில், தம்முடைய அரசாங்கத்தை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்திட முடிவுசெய்திருக்கிறார்கள் என்பதைக்கேள்வியுறும்போது — காலம் செய்யும் ஜாலத்தை என்னென்பது?

பலாத்காரத்தில் இறங்கி — பல்லாயிரம் வாலிபரைப் பலிகொடுத்து —பல்வேறு கொடுமைகளைச் சந்தித்தபின்னரே அந்த வழி பயன் தராது என்பதை இன்றைக்கு சிங்கள சமுதாயம் உணர்ந்து—அஹிம்சை வழியில் அரசியல் நடத்த முடிவு செய்திருக்கிறதென்றால் — தமிழர் சமுதாயமும்—அதன் தலைவர் தந்தை செல்வாவும் என்றோ தீர்க்க திருஷ்டியுடன் பின்பற்றத்தொடங்கிய சாத்வீக அரசியல் நெறிக்கு கிடைத்த தார்மீக வெற்றியல்லவா அது?

நண்பா, சிங்கள மக்களின் கட்சிகளில் ஒன்றான ஐக்கிய தேசியக் கட்சி மட்டும்தான் சாத்வீக போராட்டத்தின் பெருமையை இன்றைக்கு உணர்ந்து கொண்டிருப்பதாக மட்டும் எண்ணாதே; சாத்வீகப்போராட்டத்தையாராலும் ஜெயிக்கமுடியாது என்று இந்த அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான மைத்திரிபால சேனநாயகாவே காந்தி ஜெயந்திக் கூட்டமொன்றில் அண்மையில் குறிப்பிட்டுக் கூறியதன் மூலம், தமிழ் மக்கள் தமது சுதந்திரத்துக்காக இன்று நடத்திவரும் சத்தியப்போராட்டத்தை நசுக்கமுடியாது என்பதை மறைமுகமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்! இந்த அளவுக்கு தமிழர் சமுதாயம் அரசியலில் தேர்ந்தெடுத்துள்ள சத்தியநெறியின் பெருமையை, சிங்கள சமுதாயமும் உணரத்தலைப்பட்டுள்ளது மெத்தவும் மகிழ்ச்சியையூட்டுகிறதல்லவா நமக்கு!

நண்பா, அரசாங்கத்தின் உணவுற்பத்திப் போரை முறியடித்திட — உணவு நெருக்கடியைப் பயன்படுத்தி இன்றைய ஆட்சியாளரைக் கவிழ்த்திட —யூ. என். பி. செய்து வரும் கிளர்ச்சிகளை தமிழ் மக்கள் ஆதரிக்கின்றார்களா என்று கேட்டால் நிச்சயம் இல்லையென்றே கூறுவேன்! இதை உறுதிப்படுத்துவதுபோலத்தான், யூ. என். பியின் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்துகொள்வதில்லையென தமிழர் கூட்டணி திட்டவட்டமாக அறிவித்துளது!

சிங்கள மக்களை எந்தக்கட்சி ஆளவேண்டும்; எப்படி ஆளவேண்டும்; என்பதெல்லாம் சிங்கள மக்கள் தீர்த்துக்கொள்ளவேண்டிய பிரச்சினை; அந்தப் பிரச்சினைக்குள் தலையிடுவதற்கு தமிழ் மக்கள் கிஞ்சிற்றும் விரும்பவில்லை; அதேபோல தமிழ் மக்களின் பிரச்சினைகளில் —சிங்கள மக்கள் தலையிடுவதையும் நாம் கிஞ்சிற்றும் விரும்பவில்லை. இதுவே நாம் பின்பற்றி வருகின்ற அரசியல் தத்துவம்—அதாவது சுய நிர்ணய உரிமைத் தத்துவம் ஆகும்!

நண்பா, இன்றைக்கு நாட்டில் 'உணவுற்பத்திப்போர்' நடைபெறுவதாக முதலமைச்சர் சிறிமாவோ பண்டாரநாயகா பிரகடனப்படுத்தியுள்ளார். அவரும் ஏனைய அமைச்சர்களும், நாடெங்கும் திக்கு விஜயம் மேற்கொண்டு இந்த உணவுற்பத்தி பற்றி பிரசங்க மாரி பொழிந்து வருகிறார்கள்! வவுனியாவில் உணவுற்பத்தி மாநாட்டில் உரையாற்றிய பிரதமர், கட்சி, அரசியல், இனபேதம் கடந்து இந்த உணவுற்பத்திப்போரில் மக்கள் குதிக்க வேண்டுமென்று அறை கூவல் விடுத்துள்ளார்!

நண்பா, பிரதமரின் பேச்சினைப்படிக்கும் போது — ''பேச்சு பல்லக்கு, தம்பி கால் நடை.'' எனும் பழமொழியே எனக்கு நினைவுக்கு வருகிறது!

தமிழினத்தை அடிமைப்படு குழிக்குள் தள்ளி வீழ்த்தி அழித்தொழிக்க வழி வகுத்துள்ள புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்தும் தமிழ்த்தேசிய இனத்தின் உரிமைக் கோரிக்கையை முன்வைத்தும்—தமிழர் கூட்டணி கடந்த ஓராண்டாக நடத்திவரும், அறப்போரில் — அரசியல் ரீதியான எதிர்ப்பியக்கங்களை அது நடத்தி வருகிறதே தவிர — பொருளாதார ரீதியில் இந்த அரசாங்கத்துக்கு தொல்லை கொடுக்கக்கூடிய எந்த வித ஒத்துழையாமை இயக்கத்தையும் அது இதுவரை நடத்தியதில்லை!

உபஉணவுப்பொருட்கள் இன்றி நாடே அல்லோலகல்லோலப்பட்டபோது—அவற்றை இறக்குமதி செய்ய அந்நிய செலாவணி இன்றி ஆட்சியாளர்கள் தவித்தபோது — அவற்றைப் போதிய அளவு உற்பத்தி செய்து நாட்டு மக்களின் கஷ்டத்தையும், அரசாங்கத்தின் நெருக்கடியையும் போக்கியவர்கள் தமிழ் மக்கள் தாம்!

பொருளாதார ரீதியிலும் ஒத்துழையாமை இயக்கத்தை தமிழர் கூட்டணி விஸ்தரித்திருந்தால்-உபஉணவுற்பத்தியில் ஈடுபடவேண்டாம் என்று தமிழ் மக்களை தடுத்திருந்தால், அன்றே அரசு ஆட்டம் கண்டிருக்கக் கூடும்! ஆனால் தமிழர் கூட்டணி அப்படிச் செய்யவில்லை! உப உணவு உற்பத்தியில் ஈடுபட்டு—தமிழ் ஈழத்தை தன்னிறைவு காணச்செய்யும்படியே தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தது! தமிழ் மக்கள் கொடுத்த பொருளாதார ரீதியிலான ஒத்துழைப்பால்தான் இந்த அரசு அன்றைய நெருக்கடியிலிருந்து தப்பிப்பிழைத்தது!

இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற உணவு நெருக்கடியிலிருந்தும் நாட்டைக் காப்பாற்றிட—தமிழ் ஈழத்தை தன்னிறைவு கொண்ட ஒரு நாடாக்கச் செய்திட — தமிழ் மக்கள் தயாராகத்தான் இருக்கிறார்கள்! ஆனால் இந்த நெருக்கடி நிலையிலும் கூட அரசு எப்படி செயல்படுகிறது? இதைத்தான் நாம் எண்ணிப்பார்த்திடவேண்டும்!

கட்சி, அரசியல், இனபேதமின்றி உணவுற்பத்தியில் ஈடுபடும் படி முதலமைச்சர் வேண்டுகோள் விடுக்கின்றாரேயன்றி நடைமுறையில் அவரும் அவரது அரசும் எப்படி செயல்படுகிறது? உண்மையில் இன்றைய அரசுதான் உணவுற்பத்தித்துறையிலும் — இனபேதத்தையும், அரசியல் பேதத்தையும், கட்சி பேதங்களையும் வளர்த்து வருகிறது!

உணவு உற்பத்திதுறையை கண்காணிக்கவும், கொண்டு நடத்திடவும், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வோர் அரசியல் அதிகாரிகளை அரசு நியமித்திருக்கிறது என்பதை நீ அறிவாய்! மக்களுடன் நெருங்கிய உறவுள்ளவர்களை—மக்கள் செல்வாக்குள்ளவர்களை — இந்தப் பதவிகளில் நியமித்திருப்பதாக அரசு தம்பட்டம் வேறு அடிக்கிறது!

நண்பா, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்த அரசியல் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருப்பவர்கள்—அரசினர் கண்களில் மக்கள் செல்வாக்குடையவர்களாக தோற்றுபவர்கள் யார் யார் தெரியுமா?

யாழ் மாவட்டம் — சி. அருளம்பலம்.

வவுனியா மாவட்டம் — கே. பி. இரத்திநாயகா.

மன்னார் மாவட்டம் — கே பி. இரத்திநாயகா.

மட்டக்களப்பு மாவட்டம் — பி. ஆர்: செல்வநாயகம்,

திருக்கோணமலை மாவட்டம் — ஜனுப் மஜீத்.

இவர்கள் தாம் மேற்கண்ட ஐந்து தமிழ் மாவட்டங்களின் அரசியல் தலைவர்களாம்! மக்கள் செல்வாக்குள்ளவர்களாம்! கூறுகிறது அரசு! இவர்களுடன் தான் ஒத்துழைத்து தமிழ் மக்கள் உணவு உற்பத்தியில் ஈடுபடவேண்டுமாம்!!

ஆம் நண்பா, தமிழ் ஈழத்தில் தமிழ் மக்களின் ஈடிணையற்ற செல்வாக்குப் பெற்றுள்ள — தமிழினத்தின் நம்பிக்கையைப் பெற்றுள்ள—தமிழர் கூட்டணியினரை அப்படியே ஒதுக்கிவிட்டு—புறக்கணித்துவிட்டு-தனது பிரதிநிதிகளையும், தனக்கு பாதம் தாங்கி குற்றேவல் செய்து அடிநக்கி வாழும் சுட்டப்பர்களையும் உணவுற்பத்தி என்ற போர்வையில் அரசியல் தலைவர்களாக நியமித்து தமிழ் ஈழத்தை தனது ஒரு ''காலனி'' நாடு போல ஆக்கி — ஆட்சி நடத்திட சிங்கள அரசு எண்ணும் போது -- அதற்கு மான உணர்வுள்ள தமிழ் மக்களின் ஒத்துழைப்பு எப்படி எங்கிருந்து கிடைத்திட முடியும்?

அது மட்டுமல்ல—தமிழ் பிரதேசத்தில்—செட்டிகுளத்திலும், செங்கலடியிலும் பல தலைமுறைகளாக காடு வெட்டி விவசாயம் செய்து வந்த பல தமிழ்க் குடும்பங்கள் —'உணவுற்பத்திப் போர்' பிரதமரால் பிரகடனம் செய்யப்பட்ட பின்னர்—அவ்விடயங்களிலிருந்து வெளியேற்றப்படுகின்ற அதே நேரத்தில்—சிங்களக் குடும்பங்கள் மட்டும் இத்தகைய நெருக்கடிகளுக்கு ஆளாகாமல் பாதுகாக்கப்படுவதையும் காணும் போது, உணவுற்பத்தியில் கூட இன ரீதியான பாரபட்சம் காட்டுவது இந்த அரசு தான் என்கின்ற உண்மை துலாம்பரமாகத் தெரிகிறது!

எனவே நண்பா, பிரதமருக்கும் ஆட்சியாளருக்கும் மிகவும் பொறுப்புடன் கூறிக்கொள்வோம்—தமிழ் மக்களின் உணர்ச்சிகளை மதித்து—தமிழ் மக்களின் உண்மையான தலைவர்களை மதித்து—சொல் மட்டுமன்றி செயலிலும் இன பேதமின்றி உணவுற்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## பிரதமரின் 'பசி' ஞானம்!

இன்றைக்கு திடீரென்று இந்த நாட்டு முதலமைச்சருக்கும் ஏனைய அமைச்சர்களுக்கும் 'சுடலை ஞானம்' பிறந்திருக்கிறது போலத் தெரிகிறது!

இதைச் சுடலைஞானம் என்பதைவிட 'பசிஞானம்' என்று கூறிடுவதுதான் இன்னும் பொருத்தமானது!

நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியும் உணவுற்பத்தி முயற்சிகளுமே இந்த திடீர் ஞானத்தை அமைச்சர்களுக்கும் இந்த அரசுக்கும் ஏற்படுத்தியிருக்கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது!

இன, மத, மொழி, அரசியல், கட்சி பேதம் கடந்து நாட்டு மக்கள் அனைவரும் உணவுற்பத்தித்துறையில் அரசுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று பிரதமர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்!

இந்த நாட்டுக்கு புதிய அரசியல் சட்டம் எழுதப்பட்ட வேளையில் — அச்சட்டம், இன, மத, மொழி, அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில்—எல்லா மொழிகளுக்கும், எல்லா இனங்களுக்கும், எல்லா மதங்களுக்கும் சம அந்தஸ்தும், சமவாய்ப்பும் அளிக்கக் கூடியதாக—உருவாக்கப்படவேண்டுமென்று தமிழ்த்தேசிய இனம் ஆட்சியாளரை நோக்கி வேண்டுகோள் விடுத்தது —

ஆனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை சர்வாதிகாரமும், சிங்கள பௌத்த ஆதிக்க வெறியும் மேலோங்கிய நிலையில் — தமிழினத்தின் கோரிக்கையை உதறியெறிந்து விட்டு — ஏதேச்சாதிகாரமாக புதிய அரசியல் சட்டம் ஒன்றை உருவாக்கியது அரசு!

அச்சட்டம், சிங்கள மொழிக்கும், சிங்கள மக்களுக்கும் பௌத்த மதத்துக்கும் உயர்ந்த அந்தஸ்தை அளித்துள்ள அதேவேளையில், தமிழ்இனத்தின், மொழி, மற்றும் அரசியல் உரிமைகளை மறுத்து — தமிழ் மக்களை இரண்டாந்தர நிலைக்கு — ஆளப்படும் இனம் என்ற இழி நிலைக்கு இன்று தாழ்த்தியுள்ளது.

இன, மத, மொழி, வேறுபாடுகளுக்கு அடித்தளமிட்டுள்ள ஓர் அரசியல் யாப்பை தயாரித்து, அதைச் சட்டமாக்கி, அச்சட்டத்தின் கீழ் ஆட்சி நடத்தும் பிரதமர் தான், உணவுற்பத்தியில் இன, மத, மொழி பேதமற்ற ஒத்துழைப்பை நாட்டு மக்களிடமிருந்து கோரியிருக்கிறார்!

புதிய அரசியல் சட்டம், தங்களுடைய உரிமைகளை மறுத்து தமிழ் இனத்தை இரண்டாந்தர நிலைக்கு தள்ளியுள்ளதை எண்ணியெண்ணி தமிழ் மக்கள் கடந்த ஓராண்டுக்கு மேலாக குமுறிவருகிறார்கள்!

தங்களின் உள்ளக்குமுறலை, ஆறு அம்சக்கோரிக்கையாக வடித்து இந்த ஆறு அம்சக்கோரிக்கையின் அடிப்படையில் புதிய அரசியல் திட்டம் திருத்தப்படவேண்டும் என்றுதமிழர் கூட்டணி மூலம் 1972 யூன் மாதம் மகஜர் ஒன்றைப் பிரதமருக்கு அனுப்பியும் பார்த்தார்கள் இந்நாட்டுத் தமிழ் மக்கள்!

அதுவும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே—அரசின் கவனத்தைத் திருப்புவதற்காக, காந்திய வழியில் சனநாயக நெறி முறைக்குட்பட்டு — அமைதியான கிளர்ச்சிகளில் கடந்த ஓராண்டாக தமிழ் மக்கள் ஈடுபட்டுவருகிறார்கள்!

தமிழ் மக்களின் உரிமைக்கோரிக்கையை அரசின் கவனத்துக்கு கொண்டு வருவதற்காக தமிழினத்தின் தலைவர் தந்தை செல்வா 1972 அக்டோபர் 3ம் நாள் தமது பா. உ. பதவியை ராஜினமா செய்து இடைத்தேர்தல் ஒன்றுக்கு வழிவகுத்தார்.

இத்தனை நடந்தும்— இந்த அரசு தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் பற்றி கிஞ்சிற்றும் கவனிக்காது — அக்கறை காட்டாது—இருந்துவருவதுமட்டுமல்ல—காங்கேசன்துறை இடைத்தேர்தலை கடந்த ஓராண்டாக நடத்தாமலும் தமிழ் இன உரிமைகளுக்காக போராடிய தமிழ் இளைஞர்களை விசாரணையின்றி சிறைக்குள் தள்ளி சித்திரவதை செய்து கொடுமைப்படுத்தியும் வருகிறது!

அரசின் இந்த அலட்சிய நடவடிக்கைகளால், தமிழ் மக்கள் உள்ளம் கொதித்து—மனம் புண்பட்டு — வெறுப்பு, விரக்தி இவற்றின் மத்தியில் வெந்துகொண்டிருக்கும் இன்றைய நிலையிற்தான்—ஏதும் அறியாதவர் போல் — பக்தா இது என்ன பூலோகமா என்று கேட்பதுபோல — இனமத, மொழி, பேதம் கடந்து உணவுற்பத்தித் துறையில் இறங்கும்படி தமிழ் மக்களிடம் கோரிக்கை விட்டிருக்கிறார் பிரதமர்!

இது வேதனை கலந்த வேடிக்கை என்பதைத் தவிரவேறு நாம் என்ன சொல்ல முடியும்?

உணவுற்பத்தியில் அரசுக்கு தோள்கொடுத்திட தமிழ் மக்கள் எப்பொழுதும் தயாராக இருக்கிறார்கள் — ஆனால் புதிய அரசியல் சட்டத்தினல் தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு—தமிழ் இனம் இரண்டாந்தர அடிமை நிலைக்கு தள்ளப்பட்டு—தமிழ்த்தாய் இரத்தக்கண்ணீர் வடித்து நிற்கின்ற நிலையில், உணவுற்பத்தியில் தமிழ் மக்கள் எப்படி ஊக்கத்துடன் பங்கேற்க முடியும்?

பசிப்பிணி போக்குவதைவிட பைந்தமிழ் அன்னையின் இரத்தக்கண்ணீரைத் துடைத்திடுவதே நமது முதற் கடமையென்று தமிழ் இளைஞர்கள் கருதினல் அதைத் தவறென்று கூற முடியுமா?

**எனவே — பிரதமரிடம் தமிழ் மக்கள் கோருவது இது தான்!**

தமிழ் மக்களின் இன, மத, மொழி உரிமைகளை அரசியல் சட்டரீதியாக வழங்கி, தமிழ் இனம் சிங்கள இனத்துடன் சம நிலைக்கு வர கைதூக்கி விடுங்கள் — அப்பொழுது தமிழ்த்தாயின் முகத்தில் புன்னகை மலரும்! தமிழ் இளைஞர்களும் மகிழ்வுடன் உணவுற்பத்திப் போரில் குதிப்பார்கள்!

தமிழ் மாவட்டங்களின், மாவட்ட அபிவிருத்தி சபைகளின் அரசியல் தலைவர்களாக, உங்கள் பாதம் தாங்கிகளையும், தமிழ் மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டுள்ளவர்களையும் நியமிக்காது — தமிழ் மக்களின் பேராதரவும் நம்பிக்கையும் பெற்ற தமிழ் தலைவர்களை நியமியுங்கள்! இப்படிச் செய்யாவிட்டால் — தமிழ் மக்களின் பூரண ஒத்துழைப்பை உங்களால் ஒருபோதும் பெற முடியாது!

பசிவந்திடப் பத்தும் பறந்துபோம் என்பார்கள்—நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி, ஆட்சியாளரின் மனத்தில் தமிழ் விரோத, தமிழ் துவேஷ போக்குகளை கைவிடச் [illegible] வழங்கவேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறதா என்பதைப் பொறுத்திருந்துபார்ப்போம்?

# பேச்சுவார்த்தையென்றுகூறி நாடகமாடி அரசு எம்மை இனியும் ஏமாற்ற முடியாது!

## பழுகாமத்தில் அமிர்தலிங்கம் முழக்கம்!

மீன்பாடும் தேனுடு எனப் பெயர் பெற்ற வீரம் மணக்கும் மட்டக்களப்பு மண்ணில் கடந்த 5-10-73ல் 25வது நாளாக தொடரப்பட்ட தமிழ் இளைஞர் பேரவையின் உண்ணாவிரத இயக்கம் பட்டிதொட்டியெங்கும் புதிய உணர்ச்சியையும் உத்வேகத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்திவிட்டிருக்கிறது.

25 வது நாள் உண்ணாவிரதம் ஆரையம்பதி செல்வா நகர் சிவன் கோவில் முன்றலில் 5-10-73 மாலை 6.00 மணிக்கு கருத்தரங்குடன் ஆரம்பமாகி, 6-10-73 மாலை 6 மணிக்கு முடிவடைந்தது.

26 வது நாள் உண்ணாவிரதம் மட்டக்களப்பிலுள்ள சுவாமி விபுலானந்தர் சிலை முன்பு 6-10-73 மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி, 7-10-73 மாலை 6 மணிக்கு முடிவடைந்தது. இதற்கு முன் இந்த உண்ணாவிரதத்தில் கலந்துகொண்ட இளைஞர்கள் ஆனைப்பந்தி பிள்ளையார் கோவில் இறைவழிபாடு செய்துவிட்டு, அங்கிருந்து ஊர்வலமாக வந்தனர்.

இந்த இரண்டு உண்ணாவிரதங்களையும் மட்டுநகர் முதல்வர் திரு. செ. இராசதுரை அவர்கள் தொடக்கி வைத்துப் பேசுகையில் அறவழிப் போராட்டத்தை யாரும் வெற்றி கொள்ள முடியாதென்பதை எடுத்து விளக்கினார்.

### 27வது நாள்

27வது நாள் உண்ணாவிரதம் பட்டிருப்புத் தொகுதியிலுள்ள கோட்டைக்கல்லாறு பிள்ளையார் கோவில் முன்றலில் 7. 10. 73 மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி 8. 10. 73 மாலை 6 மணிக்கு முடிவடைந்தது. இந்த உண்ணாவிரதத்துக்கு பட்டிருப்பு தொகுதியின் தமிழ் இளைஞர் பேரவைத்தலைவர் திரு. நடேசானந்தம் தலைமை தாங்கினர். திருமதி கலா தம்பிமுத்து உண்ணாவிரதத்தைத் தொடக்கி வைத்தார்.

இந்த உண்ணாவிரதத்தில் 36 இளைஞர்கள் கலந்து கொண்டனர். முன்னல் மூதவை உறுப்பினர் திரு. மு. மாணிக்கம் உண்ணாவிரதத்தை முடித்து வைத்து உரையாற்றினர்.

28வது நாள் உண்ணாவிரதம் பட்டிருப்புத் தொகுதியிலுள்ள பழுகாமம் துரோபதை அம்மன் கோவிலின் முன் நடைபெற்றது. 48 பேர் கலந்து கொண்ட இந்த உண்ணாவிரதம் 8. 10. 73 மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி, 9. 10. 73 மாலை 6 மணிக்கு முடிவடைந்தது.

இதில் கலந்துகொண்டு தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:—

'தமிழ் இளைஞர்கள் ஒவ்வொருவரும் தமது உரிமை பற்றிச் சிந்திக்கத்தொடங்கி விட்டனர். இதுவே எமது இனம் விரைவில் விமோசனம் காண்பதற்கான அறிகுறியாகும். நாம் எப்பொழுதும் உரிமைக்காக சிந்தித்து விழிப்புணர்ச்சி அடையும் கட்டத்தில் எமது உணர்ச்சிகளை அடக்குவதற்கு அரசாங்கம் பல தந்திரங்களைக் கையாள்கின்றது. அவை பேச்சுவார்த்தைகளாகவும் இருக்கலாம். வேறு நடவடிக்கைகளாகவும் இருக்கலாம். ஆனல் எமது இளைஞர்கள் இனிமேலும் அவைகளுக்குப் பலியாகமாட்டார்கள்.'

'காந்திக்கு ஆபிரிக்காவில் ஏற்பட்ட பிரச்சினையைவிட எங்களுக்கு மிகுந்த பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. தனிப்பட்ட ரீதியாக காந்தி பாதிக்கப்பட்ட பின்பே அரசியலில் இறங்கினர்; அதைவிட படுமோசமான பிரச்சினைகளை தமிழ் மக்களாகிய நாம் அனுபவிக்கின்றோம். இதை எதிர்த்து நாம் எமது சுயஉரிமையைப் பெறவேண்டும்.

இளைஞர்கள் தங்களது உரிமைக்காக அகிம்சை முறையில் போராடியே தீருவார்கள். இதற்குத் தடையாயுள்ள தலைவர்களை நிச்சயமாக இளைஞர்கள் தூக்கியெறிந்தே தீருவார்கள். இந்தியாவில் மட்டுமல்ல இங்கிலாந்திலுள்ள சர்வதேச நீதிச்சபை மட்டும் போய் விட்டது.

திருமதி. மங்கையற்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ் இளைஞர்களின் போராட்டத்தில் தோளோடுதோள் நின்று நாமும் போராடுவோம் என்பதற்கு இங்கு நாம் உறுதியளிக்கின்றோம். பெண்கள் நேரில் போரிடாவிட்டாலும் தங்கள் குழந்தைகளை போராட்டத்திற்கு அனுப்பியே தீருவார்கள்.

இங்குள்ள இளைஞர்கள் அதன் முதற்படியாக தமது போராட்டத்தில் குதித்துள்ளனர். இந்த உண்ணாவிரதப் போராட்டம் சிங்கள இளைஞர்களையும் சிந்திக்க வைக்கும்.

உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைத்துப் பேசிய இளைஞர் பேரவைத் தலைவர் திரு. கி. புஷ்பராசா கூறியதாவது:-

தமிழர்களது பிரச்சினை பேசித்தீரும் பிரச்சினை அல்ல நாம் பேசுவதற்கு அரசுக்கு கொடுத்த சந்தர்ப்பங்களை அரசு தட்டிக் கழித்துவிட்டது, இன்று தமிழ் இளைஞர்கள் தமது உரிமைக்காக போராடவேண்டிய கட்டத்துக்குத் தள்ளப்பட்டுவிட்டார்கள்; யாராலும் தடுக்க முடியாத புனிதமான சாத்வீக போராட்டத்தின்மூலம் தமது உரிமைகளை நிச்சயம் அடைந்தே தீருவார்கள்.

திரு. புஷ்பராசாவைத் தொடர்ந்து இன்னும் பலர் உரையாற்றினர்.

## மன்னிக்க வேண்டுகிறேன்!

தமிழ் மக்களிடையே அதிலும் குறிப்பாக தமிழ் இளைஞர்களிடையே வீர சுதந்திர உணர்ச்சி இன்று கரைபுரண்டோடுகிறது; விடுதலைவேட்கைகொழுந்துவிட்டெரிகிறது.

அதன் பிரதிபலிப்பகா நாள் தோறும் ஏராளமான கவிதைகள், கட்டுரைகள், துணுக்குகள், கதைகள், நமக்கு வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன.

வந்துசேருகின்ற விடயங்கள் அத்தனையுமே சொத்தைகள் அல்ல; தகுதியான, பிரசுரிக்கத் தகுந்த பெறுமதிவாய்ந்தவையும் அவற்றுள் ஏராளமாக இருக்கின்றன.

அவையத்தனையையும் பிரசுரித்து இளைஞர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்ற தணியாத ஆவல் எனக்கு மிக உண்டு.

மனமுண்டானல் இடமுண்டு என்று கூறுவார்கள்; ஆனல் எனக்கு மனமிருந்தும் இடமில்லையென்ற நிலையுண்டு.

அதாவது—16 பக்கங்களாக வந்துகொண்டிருந்த சுதந்திரன் பல்வேறு காரணங்களால் பன்னிரண்டு பக்கமாகி, இன்று எட்டுப்பக்கங்களில் வெளிவந்துகொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்!

எனக்கு வந்து குவிகின்ற கட்டுரை, கவிதைகளைப்பார்க்கும் போது, இந்த எட்டுப்பக்கங்களுக்குள்—இன்னும் சரியாகச் சொன்னல் ஏழு பக்கங்களுக்குள் —எதை வெளியிடுவது, எதைத் தவிர்ப்பதுஎன்பது தர்மசங்கடமாகஇருக்கிறது.

காலப்போக்கில், மீண்டும் சுதந்திரன் பக்கங்களை நிர்வாகத்தினர் அதிகரிப்பார்களானல், எல்லோரையும் திருப்திப்படுத்த நான் நிச்சயம் முயற்சிப்பேன்!

அதுவரை — சுதந்திரனுக்கு கவிதை, கட்டுரைகள் அனுப்பிவைக்கின்ற அன்பர்கள், தாங்கள் அனுப்பிவைக்கின்ற விடயங்கள் உடனடியாக பிரசுரமாகாவிடின் — என்னைத் திட்டாமல், எனது கஷ்ட நிலையை உணர்ந்து பொறுத்துக் கொள்ளும்படி உரிமையுடன் வேண்டுகிறேன்.

— ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கும் தமிழ் என்பதே பேச்சு எல்லாமே தமிழில் என்பதாச்சு

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுக் கழகம் சமீபத்தில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்திய பாடசாலைகளுக்கான மெய்வல்லுனர் ஆட்டப்போட்டி இவ்வாண்டு முற்று முழுதாகத் தமிழில் நடைபெற்றது. பரிசளிப்பு உரையும் தமிழில்தான்.

### கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அறிவியற் பொருட்காட்சியில் அனைத்தும் தமிழில்!

அண்மையில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் ஓர் அறிவியற் பொருட்காட்சியை நடத்தியது. பொருட்காட்சியில் நுழைவுச் சீட்டு, ஒலிபெருக்கி அறிவிப்புக்கள், மெல்லிசை, சிறப்பு மலர் யாவும் ஒரே தமிழ் மயமாக விருந்தது. குறிப்பிடத் தக்கது.

காட்சிப் பொருட்களைச் சுட்டும் அடையாள அட்டைகள் மட்டுமன்றி ஆங்கு தரப்பட்ட தெளிவுரைகளும் மாணவர் போதனு மொழியில் இருந்ததை யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய தனியார் துறைப் பெரும் பாடசாலைகளைச் சார்ந்த மாணவ மாணவிகளும் மனம்விட்டு வியந்து பாராட்டினுர்கள்.

தாமும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மாணவர்களது முன் மாதிரியைப் பின்பற்றவும், தமது போதனு மொழியில் தமது கல்லூரிகளது விழாக்கள், வைபவங்களை நடத்தவும் தத்தம் கல்லூரி நிர்வாகங்கள் தடைவிதிக்கின்றனவே என்றும் அவர்கள் அங்கலாய்த்தனர்.

### புனித யோவான் கல்லூரியிலும் பண்பாடு மறுமலர்ச்சி?

நூற்றுண்டு விழாவை முன்னிட்டு புதிகாக அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தைச் சம்பிரதாய முறைப்படி திறந்து வைக்கும் வைபவத்தைச் சிறப்பாகக் கொண்டாடு முகமாக புனித யோவான் கல்லூரி ஒரு பொருட்காட்சியையும் ஒருசேர நடத்த ஒழுங்குசெய்துள்ளது.

கிறீஸ்தவ கல்லூரி நிர்வாகங்கள் தமிழுக்கு மாறல்ல என்பதை நிதர்சனமாக வெளிப்படுத்தும் வகையில் மேற்படி வைபவங்களில் மாணவர் போதனு மொழிக்கு முதன்மை தரப்படுமெனப் பேசிக்கொள்ளப்படுகிறது.

—நக்கீரன்.

## ஏன் தயக்கம்

அவ்வப்போது வட பகுதிக்கு விசயம் செய்யும் அமைச்சர்களிடம் ஒரு கேள்வி.

உணவுற்பத்தி தொடக்கம் குடும்பக் கட்டுப்பாடு வரை வடபகுதி மக்கள் அரசாங்கத்திற்கு அமோகமான ஆதரவு தருகிறுர்கள். ஆனுல் தமிழரசுக்கட்சியினரோ அரசுடன் ஒத்துழைக்கின்ருர்களில்லை என்று கூறி அலுத்துக்கொள்ளுகிறீர்கள்;

அப்படியாயின், ஒத்துழைக்க மறுக்கும் தமிழரசு வாதிகளுக்காக வல்லாது விடினும், பூரண ஒத்துழைப்பை வழங்கும் தமிழ் மக்களுக்கு அவர்களின் மொழியுரிமைகளை வழங்கலாமல்லவா?

ஏன் தயக்கம்?

—நீரன்—

## இளைஞர் பேரவை மலையகத்தில் உண்ணுவிரதம்

தமிழ் இளைஞர் பேரவையின் 35வது நாள் உண்ணுவிரதம் மலையகத்தில், அட்டன் ஸ்ரீகதிரேசன் ஆலய முன்றலில் 15. 10. 73 காலை 6 மணிக்கு ஆரம்பமாகியது. இந்த உண்ணுவிரதத்தில் சுமார் 25 வாலிபர்கள் கலந்துகொண்டனர். தேசிய கீதத்துடன் ஆரம்பமாகிய இந்த உண்ணுவிரதத்தை, இ. தொ. கழக துணைப் பொதுச் செயலாளர் திரு. கங்கரத்தினம் தொடக்கி வைத்தார்.

## சிங்கள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்திக்குழுவின் அரசியல் தலைவராக நல்லூர் பா. உ. திரு. சி. அருளம்பலமும் வவுனியா, மன்னுர் மாவட்டங்களின் அரசியல் தலைவராக கே. பி. இரத்திஞயகாவும், திருக்கோணமலை மாவட்ட அரசியல் தலைவராக ஐனுப் மஜீத்தும், மட்டக்களப்பு மாவட்ட அரசியல் தலைவராக பி. ஆர். செல்வநாயகமும் அரசாங்கத்தினுல் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி, தமிழ் மக்களிடையேபெரும் கொதிப்பை மூட்டியிருக்கிறது.

தமிழ் மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டுள்ள சி. அருளம்பலத்தையும், பி. ஆர். செல்வநாயகத்தையும்தமிழ் மக்களுடன் சம்பந்தமில்லாத கே. பி. இரத்திஞயகாவையும் மூதூர் மஜீத்தையும் அரசியல் தலைவர்களாக நியமித்துள்ள செயல், தமிழ் இனத்தையே அவமதிக்கும் ஒரு செயல் என்று கருதப்படுகிறது. இவர்களை அரசியல் தலைவர்களாக நியமித்துள்ளதன் மூலம், உணவுற்பத்தித்துறையில் தமிழ் மக்களின் ஒத்துழைப்பை இந்த அரசு பெறுகின்ற வாய்ப்பை இழந்து விட்டதாகவே கருதப்படுகிறது.

## நிதி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பத்திரிகை வாயிலாக அறிக்கையை வெளியிட்டதன் மறுநாளே அன்பளிப்புத் தொகையைத் திருப்பித் தருமாறு கேட்கின்றவர்களினதும் இலங்கைக் கிளையின் தலைமைப்பீடத்தில் முக்கிய பதவிகள் வகித்துக்கொண்டு கடந்த இரண்டு ஆண்டுகள் எதையுமே செய்யாதவர்களினதும் போக்கிலித்தனத்தை அம்பலப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்ட போது இலங்கைக்கிளையின் உறுப்பினரும் கொழும்புத் தமிழ்ச் சங்கப் பிரமுகருமான ஒருவர் பெரியோர் செய்த பிழையை மன்னிப்போம் என்று வேண்டுகோளொன்றினை விடுத்தனர்.

## 'தினகரனுக்கு' பண்டிதர் கண்டனம்

தினகரன் பத்திரிகையில் வெளியிடப்பட்டபொய்ச் செய்தியொன்றை ஆட்சேபித்து தினகரன் ஆசிரியருக்கு பண்டிதர் கா. பொ. இரத்தினம் பின்வரும் கடிதத்தை அனுப்பியுள்ளார்:-

இன்றைய (8-10-73) தினகரன் இதழில் 'அருளம்பலத்தின் குரலுக்குச்செவி சாய்க்கவேண்டும்' என நான் தாவடி முனியப்பர் கோயில் முன்றிலில் தமிழர் கூட்டணியின் உண்ணு விரதத்தின் போது பேசியதாக வெளிவந்த செய்தி பச்சைப் பொய்யாகும். 'தமிழினத்துக்குத் துரோகம் செய்யும் அருளம்பலத்தை அம்மையார் அரசியல் அதிகாரியாக்கித் தமிழ் மக்களை அவமதித்திருக்கிருர் என்றே நான் பேசினேன். எனவே இந்தத் திருத்தத்தை உங்கள் பத்திரிகையில் வெளியிடுங்கள்.

உங்களுக்குத் துணிவிருந்தால் பத்திரிகைத் தர்மத்தை மதித்தால் நீங்கள் அரசாங்கத்தின் அடிவருடிகள் அல்ல வென்ருல் சரவணையில் நடைபெற்ற கருத்தரங்கில் நான் அமைச்சர் திரு. குமாரசூரியரையும் திரு. அருளம்பலத்தையும் பற்றிப்பேசிய பேச்சினை எனது கையொப்பத்துடன் உங்களுக்கு அனுப்புகிறேன். வெளியிடுவீர்களா?

வேலணையில் அமைச்சர் நீல். டி. அல்விசுக்குத் தமிழர் கூட்டணியினர் மாலை போட்டனர் என்ற பச்சைப் பொய்ச்செய்தியைச் சுட்டிக் காட்டித் திருத்திவெளியிடுமாறு வேலணை இளைஞர்சார்பில் அனுப்பப்பட்ட கடிதத்தை இன்னும் வெளியிடாத அரசாங்கத்தின் கைப்பொம்மையாகிய நீங்கள் எந்தப்பொய்யையும், புரட்டையும் எழுதித் தமிழ் இனத்தின் உரிமைப் போரைச் சிதைக்கச் சூழ்ச்சி செய்கிறீர்கள் என்பது இப்பொழுது தமிழ் மக்கள் எல்லோருக்கும் தெரியும்.

அன்பன்,
கா. பொ. இரத்தினம் பா. உ.

## இலண்டன் முரசும்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணியமான முறையிலே எம். ஜி. ஆர். இடம் விளக்கம் கேட்டுள்ளது. இதற்கு பதில் அளிப்பதும் விடுவதும் எம். ஜி. ஆர். அவர்களது விருப்பமேயாகும். ஆனுல் மௌனம் சம்மதத்துக்கே அறிகுறி.

எம். ஜி. ஆர். மலையாளியாக இருக்கலாம். ஆனுல் அவர் ஒரு தமிழரான அண்ணுவின் பெயரை சொல்லித்தான் அரசியலில் பிழைக்கின்ருர் என்பதை மறக்க வேண்டாம்.

அண்ணு அவர்கள் 1956 தொட்டு எமக்கு (தமிழருக்கு) பலமான ஆதரவு தெரிவித்தது மறுக்க முடியாதது. 1956இல் எந்த பண்டாரநாயக்காவால் தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டார்களோ அதே பண்டாரநாயக்காவின் விழாவை இ. அ. தி. மு.க. கொண்டாடுகிறதென்ருல் இதைவிட வெட்கக்கேடு வேறெதுவும் இருக்க முடியாது!

நெய்னுர் என்றொருத்தர், கருணுநிதி தமிழருக்கு ஆதரவு தெரிவித்தால் அவரை எதிர்த்து துப்பாக்கி ஏந்தி போராடக்கூட நாம் தயங்கமாட்டோம் என கூறியிருக்கிருர். அண்ணு இப்படி இன்றிருந்து எமக்கு ஆதரவு தெரிவித்து இருந்தால் இவர் அவரையும் எதிர்த்து போரிடுவாரா? (இவர் எத்தனை முறை துப்பாக்கி ஏந்தி போரிட்டாரோ தெரியவில்லை.)

இப்படி எழுதுவதால் எம். ஜி. ஆர். ரசிகர்கள் எல்லோரும் நெய்னுர், யோகநாதன் போன்றவர்கள் என கூறவரவில்லை. லண்டன் முரசு உண்மையை வெளியிட்டதால் அது நாத்திகம் போன்று மாறக் கூடாது என கவலை தெரிவிக்கும் யோகநாதன், எம். ஜி. ஆரை புகழ்ந்து லண்டன் முரசு எழுதியிருந்தால் அது சிறந்தது என்று கூறியிருப்பாரோ? என்னவோ?

இறுதியாக இலங்கை தமிழருக்கு தமிழுணர்ச்சியுடன் ஆதரவு தெரிவிப்பவர்களே அண்ணுவின் உண்மைத் தம்பிகள் ஏனையோர் போலிகளே (இது என் சொந்தக் கருத்தே தவிர சுதந்திரனுடையது அல்ல.)

இப்படிக்கு,
துரபரன்.
கொக்குவில்.

★

கோவையண்ணு அவர்களுக்கு,

7. 10. 73 அன்றைய சுதந்திரனில் 'மக்கள் குரல்' பகுதியில் வெளியான சகோதரர் க. யோகநாதனின் கடிதம் கண்டு மிகவும் வருத்தமடைந்தேன்.

இலாப நோக்கின்றி, தமிழின் வளர்ச்சிக்காக — உயர்ந்த நோக்கத்துடன் இலண்டன்வாழ் தமிழன்பர்களால் வெளியிடப்பட்டு வரும் 'லண்டன் பிரச்சினை' ஆரம்பகாலந் தொட்டுப் படித்து வருபவள் என்பதால் ல. முரசின் தரம்பற்றி எனக்கு நன்கு தெரியும். பத்திரிகைத் தருமத்திலின்றும் சற்றும் வழுவியதில்லை, இத்தமிழ் ஏடு இதுவரை காலமும் பொய்யான செய்திகளெதையும் பிரசுரித்ததில்லையென்பதையும் அடித்துச் சொல்லுவேன்.

இலங்கைத் தமிழர்களின் அவல நிலை — கண்டு கொதித்து, வெளிநாட்டுத் தமிழர்களெல்லாம் எமது நிலையை நன்கு அறிந்து கொள்ளும் வண்ணம் உடனுக்குடன் ஈழத்தமிழர் பற்றிய உண்மையான செய்திகளை வெளியிட்டு வரும் லண்டன் முரசின் மீது குற்றம் காண முயல்வதை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

எம். ஜி. ஆர். தி. மு. கவிலிருந்து வெளியேற்றப்பட்டு, அவர் அண்ணு தி. மு. க. வைத் தோற்றுவித்த பின்னர் இலங்கைத் தமிழருக்காகக் குரலெழுப்பியதேயில்லை. இவர் அண்ணு வழி நிற்பவராயிருந்தால், எமக்காகக் குரலெழுப்பும் தமிழகத்தார் வரிசையில் இவரும் முதன்மை வகிப்பார். ஆனுல், அப்படி அவர் குரல் கொடுப்பதாகக் காணுமே. எம். ஜி. ஆர். அண்ணுவழி நிற்பவரென நம்பி அவர்மீது நாம் மதிப்பு வைத்திருந்தது உண்மைதான். ஆனுல், இப்போது அவரின் வேடம் கலைந்து சுயரூபம் தெரிந்த பின் அவர்மீது கொண்ட மதிப்பும் போய்விட்டது. ஏனெனில், இவர் தற்போது தான் சார்ந்திருக்கும் கம்யூனிஸ்டுகளின் வழியையே பின்பற்றுகிறுரென்பதால்!

நடிகர் என்ற ரீதியில் எம். ஜி. ஆர். மீது மோகங்கொண்டிருக்கும் சில இரசிகர்கள் 'லண்டன் முர'சில் வெளியான எம். ஜி. ஆரின் பேட்டியில் காணப்படும் சில வாக்கியங்கள் (ஈழத்தமிழர் சம்பந்தமான பதில்கள்) பொய்யானவை யென்றும், எம். ஜி. ஆர். அப்படிக் கூறியிருக்க மாட்டார்" என்றும் என் காதுபடக்கூறியிருக்கின்ருர்கள். 'இந்த அளவுக்கு ஒரு நடிகர் மீது மோகங் கொண்டுள்ளனரே' என நாம் வருத்தமுறவேண்டியதில்லை. சிங்கள இரசிகர்களைப் பகைக்கக் கூடாதென்பதற்காகத் தமிழர்கள் விடயத்தில் அக்கறை காட்டாத எம். ஜி. ஆர். தான் இந்த இரசிகர்களின் மதிப்பினை மதிக்க நினைக்க வேண்டும்; இனியும் மதிப்பாரா?

ஒரு நடிகர் மீது கொண்ட மையலால் அவரின் இரசிகர் மன்றத்தைச் சேர்ந்த ஒருவர் 'ல முரசு' பொய்யான சொற்றொடர்களை வெளியிட்டிருக்கின்றது என்ற ரீதியில் குற்றம் சாட்டினுல், லண்டன் — முரசின் தரம் பற்றி நன்கு அறிந்த என் போன்ற 'ல. மு. வாசகர்கள் மனம் புண்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம். ஜி. ஆர். அப்படிக் கூறியது உண்மைதானென்பதை நான் நம்புகின்றேன். இனிமேலும்இப்படிஅநியாயமாகப் பத்திரிகைகள் மீது குற்றம் சாட்ட வேண்டாமென யோகநாதனிடம் வேண்டுகின்றேன்.

செல்வி. இ. [illegible]
மயிலிட்டி.

## தமிழ் ஈழம் ஒரு....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்தி இயக்கம் நடைபெறுமாறுல் தமிழ் மக்கள் ஒத்துழைப்பு கொடுக்க என்றும் தயார்!

ஆனுல் — உணவுற்பத்தி என்ற போர்வையில் தமிழ் மக்களின் செல்வாக்கிழந்த துரோகிகளுக்கு சிங்கள ஏகாதிபத்தியத்தின் பாதம் தாங்கிகளுக்கு— எட்டப்பர்களுக்கு 'அரசியல் தலைவர்கள்' என்ற பட்டயம் சூட்டி பவனி வரச் செய்து—தமிழ் நிலத்தில் சிங்களவர்களை குடியேற்றி—தமிழ் ஈழத்தை, சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஒரு குடியேற்ற நாடு போல்— 'காலனி' நாடு போல் — ஆக்கிட முயலும் உங்கள் தவருன போக்கைத் திருத்திக் கொள்ளாவிட்டால்— உணவுற்பத்தித்துறையில் தமிழ் மக்களின் பூரண ஒத்துழைப்பை நீங்கள் சம்பாதிக்க முடியாமல் போவது மட்டுமல்ல—தமிழ் மக்களின் வெறுப்பையும் கசப்பையும் எதிர்ப்பையுமே மேலும் சம்பாதித்துக் கொள்ளப்போகிறீர்கள் என்பதுதான்!

— உன் அன்புத்தோழன்.

கோவை-மகேசன்


### தீபாவளி வாழ்த்துக்கள்

அன்பர்கள், ஆதரவாளர்கள், விற்பனையாளர்கள், பாவிப்பாளர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த தீபாவளி வாழ்த்தூக்கள் உரித்தாகுக.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண்கேட்ட மக்களிடம் 'கேக்'சாப்பிடச் சொன்ன மகாராணிக்கு நேர்ந்த கதியை மறவாதீர்!

## தேசிய அரசுப் பேரவையில் ஆட்சியாளருக்கு நவம் எச்சரிக்கை!

பட்டினியால் வாடிய ஏழை மக்கள், பாண் கேட்ட போது, பாண் இல்லாவிட்டாலென்ன — கேக் சாப்பிடுங்கள் என்று ஆணவத்துடன் கூறிய பிரெஞ்சு மகாராணியாருக்கு இறுதியில் பிரெஞ்சு புரட்சியின் போது நேர்ந்த அவல நிலையை ஆட்சியாளருக்கு எச்சரிக்கை விடுத்தார் சாவகச்சேரி பா. உ. திரு. வீ. என். நவரத்தினம்.

அரசு மீது எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நவம் பேசுகையில் கூறியதாவது:-

இப்போது மக்கள் அடையும் கஷ்டம் போல் எப்போதும் கஷ்டம் அடையவில்லை.

நான் இன்றும் சாப்பிடவில்லை. காலை சிராவஸ்தி உணவுச் சாலைக்கு ஏழரை மணிக்குச் சென்றேன். அங்கு சாப்பாடு முடிந்துவிட்டது என்று சொன்னார்கள்; மத்தியானம் நாடாளுமன்ற உணவுச் சாலைக்குச் சென்றேன். அங்கு மரவள்ளிக் கிழங்கு மட்டும் இருந்தது.

'நாங்கள் மரவள்ளிக் கிழங்கு சாப்பிட்டு வளர்ந்தவர்கள் தாம். இருந்தாலும் மரவள்ளி சாப்பிட்டுப் பலர் இறந்தார்கள் என்று பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன. எனவே தான் நான் அதைச் சாப்பிடவில்லை.

'1966ஆம் ஆண்டு ஐ. தே. க. அரசாங்கம் இரண்டு கொத்து அரிசியை ஒரு கொத்தாக வெட்டிய பொழுது அந்தச்சட்டத்தை நாடாளுமன்ற அங்கீகாரம் இன்றியே அமுல் நடத்தியது அப்போது திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா திரு, டட்லி சேனநாயக்காவைப் பார்த்துக் கேட்ட கேள்விகளை இங்கு நான் ஞாபக மூட்ட விரும்புகிறேன்.

'உங்கள் திட்டங்களை ஏன் சபைக்குச்சமர்ப்பிக்கவில்லை? மக்களின் அங்கீகாரத்தைப் பெறவில்லை? அரிசியை ஒரு கொத்தாக வெட்டும் திட்டத்தை ஏன் இந்தச் சபையில் சமர்ப்பிக்கவில்லை' இப்படிக் கேட்டார் திரு. பீலிக்ஸ். அவர் இப்போது ஐரோப்பாவில் இருக்கிறார்.

'இதே கேள்வியைத்தான் இன்றைய அமைச்சர்கள் பலரும் அன்று கேட்டனர். ஆனால் அவர்களே இன்று அவ்வாறு நடந்து கொண்டிருக்கிறார்கள்.

பங்கீட்டு அரிசி அரைக் கொத்தாகக் குறைத்ததற்கும், மாவு ஒரு இருத்தலைப் பங்கீட்டில் கொடுப்பதற்கும் காரணம் என்ன என்பதை விளக்கிஏன் இந்தச் சபைக்கு அறிவிக்கவில்லை.

அரிசிப் பங்கீட்டைக் குறைத்ததற்கு என்ன காரணம். உலகச் சந்தையில் அரிசி இல்லையா? பணம் இல்லையா? காரணம் என்ன இக்கேள்விகளுக்கு வர்த்தக அமைச்சர் சரியான பதில் அளிப்பார் என்று எதிர் பார்த்தோம்.

ஆனால் அதற்கான பதில்களை அளிக்காமல் எதிர்க் கட்சித் தலைவரின் அரசியல் வாழ்க்கை பற்றிப் பேசினார். அரிசிப் பங்கீட்டை குறைக்க நேரிட்டதற்கு உண்மையான காரணம் என்ன என்பதைத்தான் நாம் அறிய விரும்புகின்றோம்.

எமது நாட்டில் இன்று உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று கூறி அதனைத் தீர்க்க எங்களுக்கு உதவி செய்யுங்கள் என்று ரஷ்யாவிடம் நீங்கல் கேட்டீர்களா? அமெரிக்காவிடம் கேட்டீர்களா? அந்த நாடுகள் உங்களுக்கு என்ன பதில் கூறின? இதனை மக்கள் அறிய விரும்புகின்றார்கள்.

அரை கொத்து அரிசியும், ஒரு இருத்தல் மாவும் மூன்று நாளைக்குத்தான் போதும் வாரத்தில் மற்ற நான்கு நாட்களுக்கு மக்கள் என்ன செய்வது, பட்டினிகிடப்பதா?

'சில தினங்களுக்குமுன்னர் அரசாங்க தரப்பு எம். பி. ஒருவருடன் நான் அளவளாவினேன். அப்போது அவர் தான் அரிசிச் சாப்பாட்டை விட்டு ஒரு மாதம் ஆகிவிட்டது என்றார்.

'எப்படி என நான் கேட்டேன். அதற்கு அவர் தான் காலையில் பேக்கனும் முட்டையும். மத்தியானம் அரைக் கோழியும் கிழங்கும் இரவு பெரிய துண்டு மீனும் கிழங்கும் சாப்பிடுவதாகக் கூறி, இப்படி ஏன் மற்றவர்களும் அரிசிச் சாப்பாட்டை கைவிடக் கூடாது எனக் கேட்டார்.

'அப்போது எனக்கு பழைய ஐரோப்பிய ராணி ஒருவரின் கதைதான் ஞாபகம் வந்தது. மக்கள் எல்லாம் பட்டினியால் வாடியபோது பாண் இல்லா விட்டால் என்ன கேக் சாப்பிடலாமே என்று கேட்டாராய அந்த அரசி.

'அப்படிக் கேட்ட ராணிக்கு மக்கள் என்ன பாடம் படிப்பித்தனர் என்பது உங்கள் எல்லோருக்கும் நன்கு தெரியும்.

கமக்காரர்கள் விதை நெல்லை வைத்ருக்கலாம் என்றால், மீசாலையிலுள்ள கமக்காரரிடமிருந்த விதை நெல்லைப் பொலிசார் ஏன் எடுத்துச் சென்றனர் எனக் கேட்க விரும்புகிறேன்.

உற்பத்தி குறைவா, உணவுப் பொருள் வாங்கப் பணமில்லையா? அல்லது உலகில் உணவு நெருக்கடியா என்பது பற்றி மக்களுக்கு எடுத்து விளக்க வேண்டும்.

கூட்டுறவு இயக்கம் பற்றி எவ்வளவோ கூறுகிறீர்கள். ஆனால் எனது தொகுதியில் உள்ள கூட்டுறவு சமாசம் உற்பத்திக்கு எதுவித உதவியும் அளிக்கவில்லை, இச்சமாச உறுப்பினர்களை அமைச்சரே நியமித்தார். அங்கு பல ஊழல்கள் இடம்பெற்றதாக இப்பொழுது தெரிய வந்துள்ளது.

நாம் ஒத்துழைப்புக் கொடுக்க விரும்பினாலும், அரசுத் தலைவர்கள் அதை விரும்புகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன் ஒத்துழைப்பை எப்படிப் பெற வேண்டும் என்று அரசாங்கத்தினர் அறிய வேண்டும் எமது ஒத்துழைப்பை அவர்கள் விரும்பவில்லை என்பதை நாம் நடைமுறையில் கண்டிருக்கிறோம்.

எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து, 'அரசியலை மறந்து நாட்டின் உற்பத்தியைப் பெருக்க முன் வாருங்கள்' என பிரதமர் கேட்டால், நாம் ஒத்துழைக்கத்தயாராய் இருக்கிறோம்.

நாட்டில் சாப்பிட இல்லாமல் இருக்கும் போது நீங்கள் ஏன் வடக்கில் இருந்து குழப்பத்தை உண்டாக்குகிறீர்கள் எனக் கேட்கிறார்கள். பெற்றவர்களுக்குத்தான் பிரசவவேதனை தெரியும் நாம் அடக்கப்பட்டுள்ளோம்; எமது இளைஞர்கள் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் எமது உரிமை நிலை நாட்டப்படும் வரை நாம் போராடியே தீருவோம்.

# 'இலண்டன் முரசும்' எம். ஜி. ஆரும்!

இலங்கைத் தமிழர்கள் பெருமதிப்பு வைத்திருக்கின்ற அண்ணா தி. மு. க. தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக 'இலண்டன் முரசு'க்கு அளித்திருந்தபதில்கள் உண்மையானவை தானா என்று திரு. எம். ஜி. ஆர் அவர்களை சுதந்திரன் மூலம் பகிரங்கமாகவே கேட்டிருந்தோம். நமது கேள்விக்கு எம். ஜி. ஆர். அவர்களிடமிருந்து இன்றுவரை பதில் இல்லை.

ஆனாலும் யாழ் மாவட்ட எம். ஜி. ஆர். ரசிகர் மன்றசெயலாளர் ஒரு விளக்கத்தை நமக்கு அனுப்பி வைத்திருந்தார். அந்த விளக்கத்தை 7. 10. 73 சுதந்திரனில் வெளியிட்டிருந்தோம். நாம் வெளியிட்டிருந்த அந்த விளக்கத்தில் நம்மையறியாமலே மேலோட்டமாக சில பகுதிகள் விடுபட்டுப்போய்விட்டன. அந்தக் கடிதத்தை மீண்டும் பிரசுரிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அதை அப்படியே இங்கு பிரசுரித்திருக்கிறோம் —

இப்பிரச்சினையை யொட்டி மேலும் இருவாசகர்கள் எழுதியுள்ள கடிதங்களும் இங்கு இடம் பெறுகின்றன. மேற்கொண்டு இந்தப் பிரச்சினை சம்பந்தமாக எழுதப்படும் எந்தக் கடிதங்களும் சுதந்திரனில் இடம் பெற மாட்டாது என்பதையும், இப்பிரச்சினை இத்துடன் முடிவடைகிறது என்பதையும் வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

— ஆசிரியர்.

## மக்கள் குரல்

### லண்டன் முரசும் எம். ஜி. ஆரும்! சிலவிளக்கங்கள்!!

சுதந்திரன் 23-9-73 திகதி இதழில் மக்கள் திலகத்திற்கு இலங்கைத் தமிழ் மக்கள் சார்பில் ஒருகேள்வி' என்ற தலைப்பில் வெளியான செய்தி பற்றி மேற்படி செய்தி வெளியாகியுள்ள லண்டன் முரசு (19-8-73) இதழைப்பார்வையிட்டவன் என்றமுறையில் சில விளக்கங்களை அளிக்க விரும்புகிறேன்.

மக்கள் திலகத்தின் லண்டன் விஜயம் பற்றி செய்திகள் பிரசுரித்துள்ள மேற்படி இதழ், மக்கள் திலகத்தை மட்டந்தட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆங்காங்கே சில சொற்றொடர்களைச்சேர்த்திருப்பதைக் காணக் கூடியதாக இருந்தது. அவர்களும் சுதந்திரனைப்போலவே கலைஞரின் ஆட்சியை மானசிகமாக ஆதரிப்பதோ, அல்லது பிறப்பால் தமிழரல்லாத ஒருவர், பச்சையாகச் சொன்னதானால் ஒரு மலையாளி தமிழகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் அளவுக்கு மக்கள்செல்வாக்கைப் பெறுவதா என்ற காழ்ப்புணர்ச்சியோ காரணமாக இருக்கலாம் என நான் நம்புகிறேன்.

சுதந்திரன் வெளியிட்ட மேற்படி செய்தியை 'லண்டன் முரசு' மக்களைக்குழப்பி மக்கள் திலகத்திற்கு மாசு கற்பிக்கவே வெளியி[illegible] ளது என்பது உறுதியாகத் தெரிகின்றது. லண்டன் முரசில் பிரசுரிப்பதற்கென எம். ஜி. ஆர். பேட்டியளித்திருந்தால் அந்தப் பேட்டியை லண்டன் முரசில் அப்படியே பிரசுரித்திருக்க வேண்டும். அதுவே பத்திரிகா தர்மம் ஆகும். அதை விடுத்து பேட்டியில் ஒரு வரியைக் கூடப் பிரசுரிக்காமல் 'இலங்கைத் தமிழர்கள் பற்றி லண்டன் முரசிற்கு எம். ஜி. ஆர். அளித்த பேட்டியைப் பிரசுரித்து அவருக்கு தமிழர்கள் மத்தியில் இருக்கும் நல்லபெயரைக்கெடுக்க விரும்பவில்லை' என மொட்டைக் கடிதம் போல பிரசுரித்திருப்பது தான் மேலைநாட்டுப் பத்திரிகா [illegible] [illegible] யேன். உண்மையில்லையேல் அவர்களுக்கு எம். ஜி. ஆருக்கு இருக்கும் நல்ல பெயரைக் கெடுக்கும் எண்ணம் இல்லாதிருந்திருக்குமானால் அவர்கள் மேற்படி செய்தியை மொட்டையாகவோ அல்லது முற்றாகவோ பிரசுரிக்காமல் விட்டிருக்கலாம். இப்படிக் குட்டையைக் குழப்பத்தேவையில்லை.

எப்படி முயன்றாலும் 'மக்கள் திலகத்தின்' அண்ணா தி. மு. க. தமிழகத்தின் ஆட்சியைக் கைப்பற்றப் போவதைத் தடுக்கவோ அல்லது ஈழத்தில் அவருக்கிருக்கும் செல்வாக்கை அழிக்கவோ முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கிருக்கும் ஒரே கவலை தமிழகத்தில் இருந்துவெளிவரும் சில அவதூறுப் பத்திரிகைகளின் (உதாரணம்:- நாத்திகம்) வரிசையில் மேலைத்தேசங்களில் இருந்து வெளிவரும் ஒரே தமிழ்ப் பத்திரிகையான 'லண்டன் முரசு'ம் சேரத் துடிக்கிறதோ என்பதுதான்.

—க. யோகநாதன்

செயலாளர், யாழ் மாவட்ட எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம்

பழைய வீதி, கோப்பாய்.

★

நண்பர் யோகநாதன் எழுதிய கடிதத்தைப்பற்றி சில கருத்துக்களை எழுத விரும்புகிறேன் இந்தவிஷயத்தை சுதந்திரனில் வைத்து வாதாட நான்விரும்பவில்லை, ஏனெனில் சுதந்திரன்தான் எச்சமயத்திலும் தமிழர் நன்மைக்காக முதலில் குரல் கொடுக்கும் பத்திரிகை எனவே அதற்கு இலங்கையில் வாழும் ஒவ்வொரு தமிழனினதும் (அவன் சிந்திக்க தெரிந்தவனோ அல்லது சிந்திக்க தெரியாதவனோ என்பது வேறு விஷயம்) ஆதரவு தேவை. இருப்பினும் இவ் விஷயம் பிரச்சினைக்குரியதாய் வந்து விட்டது.

எம். ஜி. ஆரை மட்டந்தட்ட வேண்டுமென்ற நோக்குடன் லண்டன் முரசு ஆங்காங்கே சில சொற்களை சேர்த்திருக்கிறது என்று நண்பர் எழுதியுள்ளார். இவர், எம். ஜி. ஆர். லண்டன் முரசுக்கு பேட்டியளிக்கும் போது பக்கத்தில் நின்று அவதானித்தாரா? அல்லது எந்த ஆதாரத்துடன் எம். ஜி. ஆர், மேற்படி கருத்தை வெளியிடவில்லை என்று கூறுகிறார்?

இப்பொழுது சுதந்திரன், லண்டன் முரசு போன்றவை கலைஞர் ஆட்சிக்கு ஆதரவானவையா? அல்லது எதிரானவையா? என்பதல்ல பிரச்சினை. எம். ஜி. ஆர். மேற்படி கருத்தை கூறினாரா? இல்லையா? என்பதுதான். சுதந்திரன்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ் ஈழத்தில் தமிழர்களின் ஆட்சி-

# இதற்கு சிங்களவர் இணங்கவில்லையானல்

# நாடு நிச்சயம் பிளவுபட்டே தீரும்!'

## இலங்கை கல்வி வட்டக் கருத்தரங்கில் நாவலர் அமிர்தலிங்கம் எச்சரிக்கை!

இந் நாட்டில் வாழுகின்ற தமிழ்த் தேசிய இனம், தனது மரபு வழித் தாயகத்தில் தன்னைத் தானே தனது மொழியில் ஆளுகிறது சுயநிர்ணய உரிமையையும் ஏனைய உரிமைகளையும் பெற்று, சிங்களவர்களுடன் சமத்துவமுள்ள ஒரு இனமாகவே வாழ விரும்புகிறது. தமிழினத்தின் இந்த விருப்பத்துக்கு சிங்கள மக்கள் தொடர்ந்து இணங்கமறுத்து, தமிழினத்தை ஆளப்படும் இனமாக நடத்துவார்களானல் தமிழ் மக்கள் பிரிந்து சென்று தனிநாடு அமைத்தே திருவார்கள். இது நிச்சயத்திலும் நிச்சயம்.'

—இவ்வாறு இலங்கை கல்விவட்டத்தினல் தமிழ்—சிங்கள உறவு பற்றியும், இரு இனங்களுக்கிடையேயுள்ள பிரச்சினைகள் பற்றியும் ஆராய்வதற்கு கொழும்பில் நடத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றில் பார்வையாளராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழரசுக் கட்சித் தலைவரும், தமிழர் கூட்டணி செயலாளர் நாயகமுமாகிய திரு. அ. அமிர்தலிங்கம் உறுதிமிக்க குரலில் எடுத்துரைத்தார்.

தமிழ் அறிஞர்களும், சிங்கள அறிஞர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு தமிழ், சிங்கள மக்களுக்கிடையிலுள்ள பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தனர்.

இந்த கருத்தரங்கில் பேசிய திரு. நெவில் ஜெயவீர, இந் நாட்டில் பூரணமான வாழ்வு நடத்துவதற்கு தமிழர்களுக்கு சம உரிமை வழங்கப்படவில்லை யென்பதையும் தமிழர்கள் பாரபட்சமாக நடத்தப்படுகிறார்கள் என்பதையும், சிங்கள மக்கள் ஒப்புக்கொண்டேயாக வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

குருநாக்கல் பிஷப் வண. லக்ஸ்மன் விக்கிரமசிங்கா பேசுகையில் — 'தமிழ் இந் நாட்டுச் சிறுபான்மை மக்களின் தேசியமொழியென்பது அரசியல் சட்டத்திலேயே வரையப்பட வேண்டுமென்றும், இலங்கைப் பிஜைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்திய வம்சாவளியினரின் பிரஜாவுரிமையை அரசு நினைத்த நேரத்தில் ரத்து செய்வதற்கு வசதியாக அரசியல் சட்டத்தில் இப்போது இடம்பெற்றுள்ள விதியை அதிலிருந்து நீக்க வேண்டுமென்றும்' குறிப்பிட்டார்-

சீன சார்பு கம்யூனிஸ்ட் தலைவர் திரு. நா. சண்முகதாசன் பேசுகையில்—தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராகவாழும், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மாகாண சுயாட்சி அளித்து, தமிழை அவ்விரு மாகாணங்களில் ஆட்சி மொழியாக்குவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று கருத்தறிவித்தார்.

திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில்—இங்குள்ள இந்திய வம்சாவளியினரான தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு போதிய அளவு அரசியல் பலம் அவர்களிடம் கிடையாது. இந்தியத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர் வேறு—வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழர்கள் வேறு அல்ல. எல்லோரும் ஓர் இனத்தை சேர்ந்தவர்கள். ஒரே மொழியை பேசுபவர்கள் அதனல் தான் நாம் அவர்களிடம் உரிமைக்காகவும் போராடுகிறோம். சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் முதலில் தீர்க்கப்பட்டால்தான் ஒத்துழைப்பு அளிக்க முடியும்' என்று குறிப்பிட்டார்.

இந்தக் கருத்தரங்கில் திரு. எம். திருச்செல்வம் பேசியதாவது:-

'தமிழர்கள் ஆகிய நாம் இந்த நாட்டை ஆண்டவர்களின் பரம்பரையில் வந்தவர்கள். இந்த நாட்டில் தமிழ் ராஜ்யம் வைத்துச் செங்கோல் நடத்திய பரம்பரையினர் நாம். 'ஆகவே நாம் சலுகைகள் கேட்கவில்லை. எமது உரிமைகளைத்தான் கேட்கிறோம்.

போர்த்துக்கேயர் இந்த நாட்டுக்கு வருகை தந்த போது யாழ்ப்பாணத்தில் தமிழர்களுக்கெனத் தனி ராஜ்யம் இருந்திருக்கிறது.

'இந்த நாட்டைத் தமிழர்களாகிய நாம் ஆண்டது அநேக காலம். ஆனல் ஆளப்பட்டது சில காலமே. எனவே தமிழர்களாகிய எம்மை ஆளப்பட்ட ஒரு இனமாகச் சிங்கள மக்கள் கருதிவிடக்கூடாது;

'எனவே, இந்த நாட்டை ஆண்ட பரம்பரையினராகிய நாம் எமது உரிமைகளைத் தான் கேட்கிறோமே தவிரச் சலுகைகளை அல்ல.

'தமிழர்களாகிய எமக்குத் தனியான கலாசாரம் இருக்கிறது. நாம் தனிமையாக வாழ்ந்தவர்கள், எமக்கென்று ஒரு மொழி இருக்கிறது. எமக்கும் ஏனைய மக்களுக்குள்ள உரிமைகள் போன்று உரிமைகள் இருக்கின்றன.

'சோல்பரிக் கமிஷன் முன்னிலையில் எமது உரிமைக்காக வாதாடிய தமிழர்கள், எமது உரிமைகளை நிலைநாட்டியிருக்க வேண்டும். ஆனல் அவர்கள் அந்த விடயத்தில் தவறிவிட்டார்கள். இது தான் நாம் விட்ட பிழை.

''ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் எல்லாம் எமது அடிப்படை உரிமைகளைத் தர மறுத்து விட்டன. புதிய அரசமைப்புச் சட்டத்தில் தமிழ் மொழிக்குஉரியஇடம் அளிக்கப்படவில்லை.

''எமது இளைஞர்களுக்குக் கல்வித் துறையில் அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளன. வாய்ப்புத்துறையில் அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளன.

''தமிழர்கள் தம்மைத் தமிழ் மொழியிலேயே ஆள வேண்டும் என்று நினைக்கிறார்கள். அது தவறு? எமது சுயகௌரவத்தைப் பாதுகாக்கும் உரிமை எமக்கு உண்டு. நாடு சுதந்திரம் அடைந்த போது சிங்களவர்களுடன் நாம் சரிநிகர் சமமாக வாழ்வோம் என்று எண்ணினேம். ஆனல் அது நடைபெறவில்லை

''இந்த நாட்டை ஆண்ட எல்லா அரசாங்கங்களும் சிங்கள அரசாங்கங்கள் அல்ல. தேசிய அரசாங்கம் தமிழர்களும் சேர்ந்திருந்த ஒன்று. தமிழர்கள் தங்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவரை அமைச்சராக நியமிப்பதற்கு வழிவகுத்துக் கொடுத்தது தேசிய அரசாங்கம் தான்.

''தமக்கென்று ஒரு எதிர்காலம் இருக்கின்றதா என்ற ஏக்கநிலையில் இன்றுமலைநாட்டுத் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்கள தமிழ்மொழியையே பேசுகிறார்கள். மொழியால் இனத்தால் அவர்கள் தமிழர்களே, அவர்களின் உரிமைக்காக நாம் போராடக்கூடாதா?

இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையில் கலாசார ரீதியாகத் தொடர்புஉண்டு. ஆனல் இந்த அரசாங்கம் செய்தது என்ன? இந்தியாவில் இருந்து புத்தகங்கள், திரைப்படங்கள் இறக்குமதி செய்யப்பட்டு வந்ததைக் கட்டுப்படுத்தியது.

''இதனல் இரு நாட்டுத் தமிழர்களிடையே நிலவிவரும் கலாசாரத் தொடர்பைக் கட்டுப்படுத்தி உள்ளது.

### உரிமையுடன் வாழவிரும்புகிறேம்

''தென்னிலங்கையில் இருப்பவர்களுக்கு இரத்தினக் கற்கள் இருப்பது போன்று எம்மிடம் இரத்தினக்கற்கள் இல்லை: இந்த நாட்டில் உரிமையுடன் வாழ நாம் விரும்புகிறேம்; எமது உரிமைகளைத்தான் நாம் கேட்கிறேமேயொழியச்சலுகைகளை அல்ல.

''தமிழர்களுக்குக் காணிகள் வழங்கப்பட்டால் அவர்களும் உணவு உற்பத்தியில் ஈடுபடுவார்கள். ஆனல் அரசாங்கம் அதைச் செய்வதாக இல்லை. நாம் இந்த நாட்டில் ஏனைய சமூகத்தவர்களுடன், குறிப்பாகச் சிங்களச் சகோதரர்களுடன் சரிநிகர் சமானமாக வாழ விரும்புகிறேம்.

''அதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை''—இவ்வாறு திருச்செல்வம் கூறினர்.

திரு. அ. அமிர்தலிங்கம் பேசும்போது கூறியதாவது:-

'சிங்களவர்களுக்கு சில பிரச்சினைகள் மட்டுமே உள்ளன என்றும் மற்றப்படி அவர்களுக்கு குறைகளோ மனத்தாங்கலோ இல்லை என்றும் இங்கு உரை நிகழ்த்திய திரு. நிசங்கா விஜேரத்ன ஒப்புக்கொண்டார். சிங்களவர்கள் தங்களுக்குள்ள பிரச்சினைகளை தம்மிடம் உள்ள அரசியல் சக்திகள் மூலம் நிவர்த்திசெய்து கொள்ளலாம்.

'ஆனல் தமிழர்களின் நிலை அப்படியல்ல, அவர்களுக்கு நிறையக் குறைபாடுகள் உள்ளன. மனத்தாங்கல்களும் உள்ளன. கோல்புறூக் கமிஷனின் சிபார்சு அடிப்படையில் நிர்வாகம் நடந்த போது தமிழ்ப்பகுதிகள் தனியாகவே நிர்வகிக்கப்பட்டன. அப்போது நிர்வாக பேதமோ, இனப்பூசலோ, தாக்கங்களோ இருக்கவில்லை.

'ஆனல் இன்று நிலைமை அப்படியல்ல. இங்கு நாம் இந்த நாட்டுப் பிரஜைகள் போலவா நடத்தப்படுகிறேம்? இன்னெரு நாட்டிலிருந்து குடிபெயர்ந்து வந்து இந்தநாட்டில் வசிக்கும் இரண்டாந்தரப் பிரஜைகள் போல்அல்லவா நடத்தப்படுகிறேம்!

'பிரிட்டிஷார் சிறுபான்மை இனத்தையும் பெரும்பான்மை இனத்தையும் மோதவிடும்சூழ்ச்சியில் ஈடுபட்டார்கள். பிரித்தாளும் தந்திரத்தைக்கையாண்டார்கள். அவர்கள் போய்விட்டார்கள். ஆயினும் பெரும்பான்மையினரான சிங்களவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று எம்மை இரண்டாந்தரப் பிரஜைகள்போல் நடத்திவருகிறார்கள்.

'தமிழர்கள் தங்களை தாங்களே ஆளுவதற்கு உரிமை கோருகிறார்கள், அவர்கள் சுயமரியாதையுடனும், சுயகௌரவத்துடனும் ஏனைய சிங்களச் சகோதரர்களுடன் சமமாக வாழ விரும்புகிறார்கள். இந்த உரிமைகள் தமிழர்களுக்கு மறுக்கப்பட்டால் நாம் நிச்சயம் நாட்டைப் பிரித்தே தீருவோம்.'— இவ்வாறு திரு. அமிர்தலிங்கம் கூறினர்.



இ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. எல். எம். எஸ். செய்யது முகம்மது அவர்கள் தமிழ் நாடு சென்ற போது, தமிழ் நாட்டில் சர்வ கட்சித்தலைவர்களையும் சந்தித்து, இலங்கைக்கு தமிழ் தெரிந்த ஒருவர் தூதுவராக நியமிக்கப்பட வேண்டுமெனவும் தாயகம் திரும்பும் தமிழர்களுக்கு சிறந்த முறையில் புனர்வாழ்வு தரப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். திரு. எல். எம். எஸ், திரு. காமராஜர் உட்பட தமிழ் நாடு முதலமைச்சர், புதுவை முதலமைச்சர். முஸ்லிம் லீக் தலைவர் தமிழரசுத் தலைவர்கள் மற்றும் கலையுலக பிரமுகர்களையும் சந்தித்தார். படத்தில் திரு. காமராசர், முரசொலி அடியார் ஆகியோருடன் இ. தி. மு. க. பொதுச் செயலாளரும் காணப்படுகிறார்.

---

### சோசலிசமாம் சோசலிசம்..!

சிங்கள சோசலிச ஆட்சியில் தமிழ்ப்பகுதிகளுக்குத் 'திக்' விஜயத்தை மேற்கொள்ளும் மந்திரிமாரும், அரை மந்திரிமாரும், அடிவருடிகளும் கூட்டரசாங்கம் தமிழைப் புறக்கணிக்கவில்லை என்று கூறிவருவதையும் இதைக்கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்து வரும் நெய்ப்பந்தக் காரர்களையும் உண்மையில் நடைமுறையில் அதற்கு மாறாக நடப்பதையும் தமிழ் மக்கள் அறிவர்.

கடந்த25ம்தேதியிடப்பட்ட 'அமய பாடசாலை எழுதுநர்' பதவிக்கு நியமனம் செய்வதாய்த் தமிழருக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் தனிச் சிங்களத்தில் அனுப்பப்பட்டுள்ளன. தமிழ் பேசுபவர் ஒருவர் அமைச்சராய் உள்ள கல்வி அமைச்சிலிருந்தே அனுப்பப்பட்ட இக்கடிதங்களுக்குத் தமிழ் மொழி பெயர்ப்பும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபாவளி ரம்ழான் பண்டிகைகளை முன்னிட்டு

## 23ம் திகதி முதல் கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்)

ஜெமினி, ஜெயந்தி, முத்துராமன்,
நாகேஷ், M.R.R. வாசு, A. சகுந்தலா
—நடித்த— கே. பாலசந்தரின்

# புன்னகை

---

4-வது வாரம்! கெப்பிட்டல்

எனது பிள்ளைக்கு எப்படி
எடுத்துரைப்பேன்

**( HOW DO I TELL MY CHILD )**
( கலர் )
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மாத்திரம்)

---

கிங்ஸ்லி (கொழும்பு)

எம். ஜி. ஆர். —நடித்த— **சந்திரோதயம்**

பிளாசா (வெள்ளவத்தை) சிவாஜி சரோஜாதேவி —நடித்த—

**பாகப்பிரிவினை**

---

## 24ம் திகதி முதல் செல்லமகால்



தேவன்
அழகக்கோன்
எஸ். வி. சுப்பையா
ஜெயகாந்
ர ஜலக்ஷ்மி
லீலாரஞ்சனி
மற்றும் பலர்
—நடித்த—
எம். என். எம். புரடக்ஷன்ஸ்

# மீனவப் பெண்

தயாரிப்பு:- சே. காதர் மீரா (முத்தலிப்)
கதை, வசனம், டைரக்ஷன்:- P. S. கிருஷ்ணகுமார்

---

## கொழும்பில் 2-வது மாதமாக

கெயிட்டி திரையில்

தியாகங்கள் பலவகை!
காதலுக்காக முடிதுறந்து மன்னர்களும் தியாகம் புரிந்தனர் ஆனால்! இவள் செய்த தியாகமோ எந்த ஒரு பெண்ணும் இழக்கத்துணியாததை அவள் தியாகம் செய்தாள்! ஏன்? யாருக்காக?

கே. பாலசந்தரின்

# அரங்கேற்றம்

எஸ். வி. சுப்பையா
சிவகுமார்
சசிகுமார்
ஜெமினிமகாலிங்கம்



பிரமிளா
என். எம். ராஜம்
சுந்தரிபாய்
ஜெயசித்ரா

பெரியவர்களுடன் வரும் இளையவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

---

## மகா தீபாவளி விருந்து

## சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்) ஈரோஸ் (பாமன்கடை)

இதயத்தை உருக்கும் தாயின் அன்பு! அழகும், வலிமையும் அன்புக்கு நிகரில்லை!
தாய், தந்தை, சகோதரர்கள் மெச்சத்தகுந்த ஓர் சித்திரம்!
சிரிப்பும், அழுகையும் சரிவர நிறைந்த எல்லோரும் பார்க்கவிரும்பும் உன்னத நடிப்பு!

ஜெயா, முத்துராமன், சாவித்திரி, சகுந்தலா, சோ, மனோரமா நடித்த—

# பெற்ற மனம் பித்து

---

கடைசி 3 நாட்கள் எம்.ஜி.ஆர். நடிக்கும் — **மாட்டுக்கார வேலன்**


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் ஒக்டோபர் மா[illegible] திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org